விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 02 வெள்ளிக்கிழமை (18.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தோல்வியைக் கண்டு தளரவில்லை;

## இலங்கை தைரியமுள்ள நாடு

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



*(கொழும்பு)* பொதுநலவாய போட்டிகளை நடத்துவதென்பது மிகப்பெரிய விடயம். அப்போட்டிகளை நடத்துவதற்கான போட்டியில் களமிறங்குவதற்கே தைரியம் அதிகம் தேவை. அந்த தைரியம் இலங்கைக்கு அதிகமாகவே காணப்படுகின்றது. இதனால் தோல்வியைக் கண்டு நாம் மனம் தளரவில்லை என்று ஊடகத்துறை அமைச்சரும் அரசாங்கத்தின் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு இன்று வெளியாகும்

### அச்சத்தில் பொலிஸார்

(கொழும்பு)

நீதிமன்ற வளாகத்தை அதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. வெள்ளைக் கொடி வழக்கு விசாரணை குறித்த தீர்ப்பு இன்று அறிவிக்கப் படவுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற வளாகத்தை அதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்குமாறு வாழைத்தோட்ட பொலிஸார் நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

சரத் பொன்சேகாவிற்கு எதிராகவோ அல்லது ஆதரவாகவோ தீர்ப்பு அளிக்கப்பட்டால் குழப்பநிலைமைகள் ஏற்படக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்ப்பையோ அல்லது சந்தோசத்தையோ வெளிப்படுத்தக்கூடும் என பொலிஸார் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸின் இந்தக் கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி நிராகரித்துள்ளார்.

மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்துவது குறித்து பொலிஸாருக்கு போதியளவு அனுபவம் இருப்பதாகவும் அதன் அடிப்டையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இணையத்தளங்களை தடை செய்ய ஊடகத்துறை அமைச்சுக்கு அதிகாரம்

(கொழும்பு)

பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இயங்கும் இணையத்தளங்களை தடை செய்வதற்கான அதிகாரம் ஊடகத் துறை அமைச்சுக்கு உள்ளது. இதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை.

அந்த வகையிலேயே நாட்டில் இயங்கி வந்த 10 இணையத்தளங்களை தடை செய்துள்ளோம் என்று அரசாங்க பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதன்போது இணையத்தளங்கள் சிலவற்றை அரசாங்கம் தடைசெய்துள்ளமை தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்; ஆபாசங்கள், தனிநபர் விமர்சனம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மேற்படி 10 இணையத்தளங்களுக்கும் எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இருப்பினும் அக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெரிவிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்பேசும் நீதிபதிகளுக்கு இந்திய உதவியுடன் பயிற்சி

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் இயங்கும் ஆரம்ப நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு இந்திய உதவிகளுடன் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதியில் தமிழில் இயங்கும் ஆரம்ப நீதிமன்றங்களில் தமிழ்மொழி மூலமான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இப்பயிற்சிகள் வழங்கப் படவுள்ளதாக அவர் கூறினார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்ற கட்டிடத் தொகுதி பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரினால் நேற்று திறந்துவைக்கப்பட்டது. யுத்தத்தினால் சேதமடைந்த இந்த நீதிமன்ற கட்டிடத் தொகுதி 70 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப் பட்ட மை குறிப்பிடத்தக்கது.

இத்திறப்பு விழாவின் பின்னர் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

பல்லினத்தன்மை கொண்ட இந்நாட்டில் மொழிகளைக் கையாள்வது தொடர்பாக புதிய செயற்திட்டமொன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆரம்ப நீதிமன்றங்களில் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளை வழிமறித்த இந்திய கடற்படையினர்

### அம்பலமான இரகசியம்

(காலி)

கடற்புலிகள் ஆயுதங்களை ஏற்றி வந்த சிறிகிருஸ்ணா என்ற இழுவைப் படகு, மாலை தீவு கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டபோது, அதனை இடைமறித்த மாலைதீவு கடலோரக் காவல் படைக் கப்பலில் இந்தியக் கடற்படையினரும் இருந்தனர் என்பதை மாலைதீவு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் முதல் முறையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

காலியில் கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையின் மூத்த அதிகாரியான லெப். கேணல் மொகமட் இப்ராகிம், 2007-ம் ஆண்டு மாலை தீவு கடற்பரப்பில் கரையோரக் காவல்படையினரை எதிர்கொண்டபோது விடுதலைப் புலிகளே சிறிகிருஸ்ணா என்ற இழுவைப் படகிற்கு தீ மூட்டிக் கொண்டதாகக் கூறியுள்ளார்.

கப்பலின் மேல்தளத்தில் வைக்கப்பட்டிருந்த கொள்கலன்களில் இருந்த டீசலை ஊற்றிய பின்னரே கப்பலுக்கு தீ வைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு கடலோரக் காவல் படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததை அடுத்து, கடற்புலி (20ஆம் பக்கம் பார்க்க)

## 38 இலங்கையர்கள் தமிழ்நாட்டில் நிர்க்கதி

இந்தியாவிற்கு தம்பதிவ வழிபாட்டிற்குச் சென்ற இலங்கையர்கள் சிலர் தமிழ்நாட்டில் நிர்க்கதியாகியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு 38 இலங்கையர்கள் நிர்க்கதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இலங்கையர்களை இந்தியாவிற்கு அழைத்துச் சென்ற நிறுவன உரிமையாளர் அவர்களின் பணத்தை சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மீகொட பிரதேச நிறுவனமொன்றின் உரிமையாளரே குறித்த இலங்கையர்களை இந்தியாவிற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

நிர்க்கதியானவர்கள் தமிழ்நாடு மகாபோதி சங்க மத்திய நிலையத்தில் தங்கவைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-1)

## நிரந்தர சமாதானத்தை பயன்படுத்தி நீதித்துறையை வலுப்படுத்த வேண்டும்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள நிரந்தர சமாதானத்தை பயன்படுத்தி நீதித்துறையை வலுப்படுத்த வேண்டும் என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநகரில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் நீதிமன்றத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்திற்கு நான் வருகை தருவது இது இரண்டாவது முறை. எனது சிறுவயதில் இங்கு சகோதரர்களுடன் வந்துள்ளேன்.

எனது மனம் கவர்ந்த பிரதேசங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் உள்ளது. இங்கு வந்தது மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் இதுவரை காலமும் ஒரேயொரு சிறுவர் நீதிமன்றம் தான் இருந்தது. அது பத்தரமுல்லையில் உள்ளது.

இரண்டாவதாக (20ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் வாக்குரிமையை பயன்படுத்த சந்தர்ப்பம்

## பதிவு செய்யுமாறு பேரா.சிற்றம்பலம் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

**வாக்காளர் பதிவு அவசியம்**

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ள நம் மக்களுக்கு தமது வாக்குரிமையைப் பயன்படுத்த நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அவர்களது உறவினர்கள் அவர்களின் விபரங்களைப்பதிவு செய்து இவர்களின் வாக்குரிமைத்தகைமையைப்பெறுவதற்கான வாக்காளர் உரிமைக் கோரிக்கை விண்ணப்பப்பத்திரங்கள் கிராம சேவகர், உதவி அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர் ஆகியோரது அலுவலகங்களில் உள்ள இவ்விடங்களுக்குச் சென்று பத்திரங்களைப் பெற்று அவற்றைப் பூர்த்திசெய்து உரியவர்களிடம் கையளித்தால்,

வெளிநாடுகளில் வாழும் நம் உறவுகளின் பெயர்கள் வாக்காளர் இடாப்புகளில்இடம்பெறும் வாய்ப்பு உள்ளது.

அதுவும் இம்மாதம் முடிபுறுவதற்கு முன்னர் இவ்வாறு செய்தல் வேண்டும். வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்படுவதால் இவ்வாறு பதிவு செய்தல் அவசியமாகின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு உரிய மிகப்பெரிய பலம் வாக்குரிமையாகும்.

இதனைப் பயன்படுத்துவதற்கு இப்பொழுது நல்லதொரு சந்தர்ப்பம் வந்துள்ளதால் தவறாது பயன்படுத்த வேண்டும் என்றார். (எ-5)

# இரண்டாம் மொழி கற்கை நெறி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் மொழி கற்கை நெறியான சிங்களம்,ஆங்கிலம் ஆகிய பாடநெறியை கற்ற யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான பரீட்சை விண்ணப்ப படிவத்தினை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை 26ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இடம் பெறும் என தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார். (எ-11)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா இராசையா

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்ற முகவரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா அவர்கள் நேற்றுமுன்தினம் (16.11.2011) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும், பூமணி, K.R. சிவலோகநாதன் (உரிமையாளர் K.R.S நிறுவனம்), சச்சிதானந்தம் (கனடா), இராணி, இலட்சுமிதேவி, கைலாயபிள்ளை (சிறீ - உரிமையாளர் IMC, கொழும்பு), சிவஞானசுந்தரம் (சிவா), விக்கினேஸ்வரன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சண்முகேஸ்வரன், இராஜதேவி, ஹேமலதா, வைத்திய கலாநிதி மகாதேவன், பேரா சிரியர் தேவராஜா, பாமதி, அமுதா, ஜசிந்தா, கலாநிதி ஆகியோ ரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :- பேராசிரியர் க. தேவராஜா
(யாழ் பல்கலைக் கழகம்)

(6815)


The 60th Annual Festival of Carols
by the Combined Choirs of
Schools and Colleges of the North
will be held at
the St. John's College Hall
on Sunday 20th Nov., 2011
at 4.00 p.m.

Admission by Programme Rs. 20/=


# மரண அறிவித்தல்

## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி



காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் யாழ். ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி கடந்த (16.11.2011) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி செந்தில்நாயகி தம்பதியினரின் அன்புமகளும், பரம்சோதி (வெங்கடேஸ்வரா-ஸ்ரோர்ஸ்) இன் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், செந்தூரன், சிவதர்ஷனி (சிங்கப்பூர்), சாளினி ஆகியோரின் அன்புத்தாயாரும், காண்டீபன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) அன்பு மாமியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியினரின் சம்பந்தியும், அருணகிரிநாதர் (ASK அன் கம்பனி-கம்பளை), இராஜகுமாரி, கமலகண்ணன், (கண்ணன்-ஸ்ரோர்ஸ்-கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், கருணாநிதி (சூரியன் களஞ்சியம்), சிவசோதி (கந்தன்-களஞ்சியம்- கிளிநொச்சி), கற்பகநாதன் (சிறிமாதவன்-யாழ்ப்பாணம்), கணேசன் (ராசு களஞ்சியம்-யாழ்ப்பாணம்), பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினிதேவி, இராஜேஸ்வரி பாலசிங்கம், சிவானந்தம், இராஜேந்திரம் (குகன் ஸ்ரோர்ஸ்-பண்டாரவளை), சிவபாதம், சொர்னாதேவி, சிவயோகன் (கம்பளை), சுரேந்திரன் (கிருஷ்ணா ஜுவலரி- யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20/11/2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

34/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
Tel: 0212225524, 077-7688488

தகவல்: குடும்பத்தினர்

(சி-4993)

## இன்று ஒரு தகவல்

### குழந்தையின் மனம்

ஒரு குழந்தை தொட்டிலிலே படுத்துக்கொண்டு அழுதுகொண்டே இருந்தது.

குழந்தையின் தயார் அடுப்பங்கரையிலே ஏதோ வேலையாக இருந்தார். தந்தையார் கதிரையிலே தனியாக அமர்ந்திருந்தார்.

''சரி எங்களால் முடிந்தளவு முயற்சி செய்து பார்ப்போம்!'' குழந்தையின் அழுகையை நிறுத்த முடியுமா என்று அப்படி நினைத்துக் கொண்டு எழுந்து அருகில் சென்றார் அவர்.

ஒரு தாலாட்டுப் பாடிப் பார்க்கலாமென்று ஆரம்பித்தார். குழந்தை அதுவரைக்கும் மெதுவாக அழுதுகொண்டிருந்தது. இவரைக் கண்டதும் பலமாக அழத் தொடங்கியது.

குடு குடுவென்று ஓடி வந்து தனது இருக்கையில் அமர்ந்து கொண்டார். நாளிதழினை பார்க்க ஆரம்பித்தார்.

தாய் வந்து மறுபடியும் ஏதோ சொல்லி அந்தக் குழந்தையைச் சமாதானம் செய்ய வேண்டியதாய் போனது.

குழந்தையை அழ வைக்கிறதென்றால், அது அப்பாவாலேதான் முடியும்!

அழுகிற குழந்தையை அமைதிப்படுத்துவதென்றால் அது அம்மாவாலேதான் முடியும்!

இப்படி பல அம்மாக்கள் சொல்வதுண்டு.

வேறுவழி தெரியாமல் அப்பாக்களும் இதை ஏற்றுக் கொள்வதுண்டு.

இதுவரைக்கும் சரி... இனிமேல் அவர்கள் அப்படி ஒதுங்க வேண்டிய அவசியம் இல்லை.

ஏனென்றால் அவர்களாலேயும் குழந்தையினுடைய அழுகையை நிறுத்த முடியும்! இதற்கு ஒரு வழி இருக்கிறது. இப்போது சொல்லிக் கொடுக்கிறேன்.

மனோதத்துவ நிபுணர்கள் சில பேர் ஒரு சோதனை செய்து பார்த்து விட்டு இதைச் சொல்லி இருக்கிறார்கள்! என்ன தெரியுமா?

உங்கள் வீட்டு குழந்தை அழ ஆரம்பிக்கிறதா?

உடனே ஒரு வானொலியை எடுத்துக்கொண்டு குழந்தையின் அருகில் செல்லுங்கள். அது அழுவதை அப்படியே நன்றாக பதிவு செய்ய ஆரம்பியுங்கள்!

அந்தக்குழந்தை 'மறுபடியும் எப்போதாவது அழ ஆரம்பித்தால் இந்த வானொலியில் பதிவு செய்த அதன் அழுகைச் சத்தத்தை உடனே அதற்கு போட்டுக் காட்டுங்கள்.

அது "கப்சிப்" என்று அழுகையை நிறுத்திவிடும்.

அதேமாதிரி ஒரு மருந்துப் போத்தலை குழந்தை தொடக்கூடாதென்று நினைத்து வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த போத்தல் மேலே ஒரு அழுகிற குழந்தையின் படத்தை ஒட்டி வையுங்கள்.

அதைப் பார்த்தவுடன் குழந்தைகள் அதைத் தொடுவதற்குத் தயங்க ஆரம்பித்ததாம்.

அவுஸ்திரேலியாவிலே மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதனை நடத்திவிட்டு இதைச் சொல்லுகிறார்கள்.

ஒரு குழந்தை அழுகிற ஒலியைக் கேட்டால் இன்னொரு குழந்தை அழுகையை நிறுத்துகிறது.

ஒரு குழந்தை அழுகிற மாதிரி உள்ள படத்தை இன்னொரு குழந்தை தொடுவதற்கு யோசிக்கிறது.

இதுதான் தற்போதைய தகவல்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## முல்லைத்தீவில் மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு விசேட முன்னேற்றத்திட்டம் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்ட மலேரியா ஒழிப்பு பிராந்திய வைத்திய அதிகாரி அ.திலீபன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இம்முன்னேற்றத் திட்டத்தில் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள், மலேரியா கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள், பொது வெளிக்கள உத்தியோகத்தர்கள், தெளிகருவி இயக்குநர்கள், பூச்சியியல் ஆய்வுப் பகுதி புகையடிக்கும் பகுதியினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ மருத்துவ உத்தியோகத்தர்கள், பிரதேச அலுவலர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்செயற்றிட்டமானது கடந்த 15 ஆம் திகதி மல்லாவியிலும் கடந்த 16 ஆம் திகதி மாங்குளம் கரிப்பட்டமுறிப்பு கிராமத்திலும் நேற்று வியாழக்கிழமை கோம்பாவில், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு கிராமங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம், நாளை சனிக்கிழமை றெட்பானா, விசுவமடு நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமை கரைச்சி குடியிருப்பு பகுதிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கள்ளப்பாடு, உண்ணாப்புலவு, செம்மலை எதிர்வரும் 24 ஆம் திகதி கணுக்கேணி, தண்ணீர் ஊற்று எதிர்வரும் 25 ஆம் திகதி வற்றாப்பளை, முள்ளியவளை எதிர்வரும் 26 ஆம் திகதி ஒட்டுசுட்டான், கற்சிலைமடு எதிர்வரும் 28 ஆம் திகதி முத்தையன்கட்டு, இடதுகரை, வலதுகரை எதிர்வரும் 29 ஆம் திகதி திருமுறிகண்டி, இந்து புரம் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது.

டெங்கு ஒழிப்பு சுகாதார நடவடிக்கைகள் உடன் தேநீர்ச்சாலை, உணவகங்களையும் பொதுச் சந்தைகளையும் பார்வையிட்டு, சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ-3-15)

## முல்லையில் இ.போ.ச.பேருந்து சேவையை ஆரம்பித்துள்ளது

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 30 வருடங்களின் பின் இலங்கை போக்குவரத்து சபையானது தனது பேருந்துசாலையையும் பேருந்து பணிச் சேவையையும் ஆரம்பித்துள்ளது.

இ.போ.ச.தலைவரினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைவாக கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரின் போது முற்றாகச் சேதமடைந்த முல்லைத்தீவு பேருந்துசாலையில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் 5 பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சேவையில் முல்லை, யாழ்ப்பாணத்திற்கு இரண்டு பேருந்துகளும் முல்லை- வவுனியா சேவைக்கு ஒரு பேருந்து சேவையும் இடம்பெற்று வருகின்றன.

இரண்டு பேருந்து சாரதிகள் இல்லாத நிலையில் தரித்து நிற்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்படி பேருந்துசாலையினால் 40 பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

எனவே, நிறைவான ஒரு சேவையை வழங்குவதாயின் இன்னும் 35 பேருந்துகள் தேவைப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. தற்போது முல்லை. மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து சேவையினாலேயே பல இடங்களுக்குரிய பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 230 |
| தக்காளி | 140 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | -- | 60 | 50 |
| கரட் | 100 | 140 | 100 |
| பூசணி | 60 | 50 | 40 |
| புடோல் | 40 | 100 | 70 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 60 |
| பாகற்காய் | 200 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 35 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 90 |
| பயற்றங்காய் | 50 | 50 | 130 |
| லீக்ஸ் | 35 | 60 | 40 |
| பீற்றூட் | 15 | 30 | 30 |
| கறிமிளகாய் | 100 | 160 | 110 |
| முருங்கைக்காய் | 50 | 90 | 50 |
| போஞ்சி | 130 | 130 | 230 |
| கத்தரிதம்புள்ள | 70 | 40 | 70 |
| கீரை - 1 பிடி | 10-12 | 40 | 20 |
| தேசிக்காய் | 180-200 | 150 | 230 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 |

## இராசி பலன்

*18.11.2011*

*(கார்த்திகை 02, வெள்ளிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*

*அட்டமி பின்னிரவு 3.40 மணிவரை*

*ஆயிலியம் பிற்பகல் 1.57 மணிவரை*

*இராகுகாலம் 10.38-12.08 மணிவரை*

*சுபநேரம் 6.08-7.38 மணிவரை*

**மேடம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், அழகுசாதனப் பொருட்களில் நாட்டம் செல்லும், வீடு கட்டும் பணியில் ஈடுபாடுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** தொலைபேசி மூலம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பிணக்குகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்** உத்தியோக அனுகூலமுண்டு, கடினமான வேலையையும் இலகுவாகச் செய்து முடிப்பீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம்.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்கள் மூலம் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், வேலைச்சுமை அதிகரிக்கும், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம், திடீர்ச் செலவுகளால் திணறுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் இல்லம் தேடி வரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், எதிர்கால நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**துலாம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், வீட்டை விருத்தி செய்வதில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், திடீர் பயணங்களால் பலனுண்டு, சிலருக்கு கட்டுப்பட வேண்டி வரலாம், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியங்களை தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் அமைதிக் குறைவு காணப்படலாம், போசன சுகமுண்டு, தொழிலில் நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**மகரம்** இறைவழிபாட்டால் இனிமை சேரும் நாள், பயணங்கள் மூலம் பலன் பெறுவீர்கள், இளமைக்கால நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மீனம்** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வெளிநாட்டு தொடர்பு அனுகூலம் தரும், பாராட்டும் புகழும் கூடும், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள்.

வளவன்





வடமராட்சியில் இரண்டு தசாப்த காலத்திற்கு முன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடம் புனரமைக்கப்பட்டு நேற்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சில்லாலை மேற்கு சாந்தை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணி சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவும் நாளை மறுதினம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுமென திருப்பணி சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3)

## கௌரவிப்பு விழா

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை சின்னத்தம்பி மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-24)

## மீள்குடியேறிய மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் மற்றும் யு.என்.எச்.சி.ஆர் இணைந்து நாவலடி, பூம்புகார் கிழக்கு, அரியாலை பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உணவல்லாத அத்தியாவசியப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் மீள் குடியேற்றப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கு சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ-6)

## மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளிற்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டி இருப்பதனால் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கீழ்வரும் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். சுன்னாகம் ,மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப்பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# யுத்த சூழலுக்குள் வாழ்ந்து வந்த எங்களை ஜனாதிபதி விடுவித்தார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கடந்தகால யுத்தங்களின் போது மிகப் பெரும் விலைகொடுத்திருந்தாலும் நீண்டகாலமாக யுத்த சூழ்நிலைக்குள் அடைபட்டு இருந்த எங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுவித்தவர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தித்திட்டம் யுத்த சூழ்நிலைகள் காரணமாக வட இலங்கையில் ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் 2000 ஆம் ஆண்டளவில் நாம் இதை நடைமுறைக்கு கொண்டு வந்தோம்.

சமுர்த்தி வேலைத்திட்டத்திற்குள் மேலதிகமாக 8 ஆயிரம் குடும்பங்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

எனினும் இத்திட்டத்தினை நம்பி கையேந்தி நிற்காது வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட முன்வரவேண்டும்.

இத்திட்டத்தில் 71 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை ஒரு நல்ல நாளில் வழங்குவதன் நோக்கத்தில்தான் ஜனாதிபதி பதவியேற்று 6 ஆண்டுகள் நிறைவு செய்யும் இந்த நாளில் வழங்குகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவசிறி ,யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் பிரதேச செயலாளர்கள், இணைப்பாளர்கள்ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)




## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா. பாலகணேசன் எழுதிய தமிழ் மொழியும் இலக்கியமும் என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நூலின் ஆய்வுரையினை ம.ப.மகாலிங்கம் ஆற்ற வெளியீட்டுரையினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா. தனபாலன் நிகழ்த்துவார்.

இந்நூலானது க.பொ.த. உயர்தர, கல்விமானி கற்கைநெறி, பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள், கல்வியியற் கல்லூரி ஆகியவற்றின் தமிழ் மொழி கலைத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டதாகும்.

எனவே விழாவிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுக் கொள்கின்றார். (அ-2)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

நுணாவில் சந்தியில் இருந்து கனகம் புளியடி சந்திவரையிலுள்ள பிரதான வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் பயணம் செய்ய முடியாதுள்ளது.

இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழைநீரானது தேங்கி நிற்பதால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் உள்ளது.

பருத்தித்துறை, புத்தூர் ஆகிய இடங்களுக்கு செல்வோர் இவ் வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதியில் தினமும் பாடசாலை மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான பயணிகளும் மற்றும் வாகனங்களும் பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் திருநெல்வேலி சேர்.பொன்.இராமநாதன் வீதியிலுள்ள பகவான் சத்திய சாயிசேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது திருவிளக்குப் பூஜை செய்ய விரும்புபவர்கள் குத்து விளக்கு, திரி, எண்ணெய், பூ அல்லது குங்குமம், தட்டு என்பவற்றை கொண்டு வருமாறு சத்திய சாயி சேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தி. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களான ஓய்வு பெற்ற அதிபர் சி. நாகையா, வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரூபா உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3)

## நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

கச்சாய் பொது நூலகத்தின் புதிய அபிவிருத்திச்சபை நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சபையின் தலைவராக சி.துரைராஜா, செயலாளராக திருமதி ற.கோவர்த்தனன், பொருளாளராக செல்வி க.சந்திரராஜி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி த.புஸ்பகலாதேவி, செல்வி சு.மணிவதனி, த.அஜந்தன், ச.விஜயசீலன், சி.அருளம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-3-29)

## கணித முகாம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியின் கணித முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிவபாதசுந்தரம் மண்டபத்தில் அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# இனங்காண முடியாத பூச்சியின் தாக்கத்திற்கு உள்ளாகும் பொன்னாங்காணிக் கீரை

யாழ்ப்பாண மாவட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் மானிப்பாய் பிரதேசத்தை அண்டியுள்ள அட்டகிரி, இடிகுண்டு வயல் வெளிகளில் விவசாயிகள் பொன்னாங்காணியை தனிப்பயிராக செய்து வருகின்றனர்.



நெல் அறுவடையின் பின்னும் வயல்களில் நீர்ப்பாசனத்துடன் செய்கை பண்ணி வருகின்றனர்.

அட்டகிரி, இடிகுண்டு வயல்களில் ஏறத்தாழ 16 ஏக்கர் விஸ்தீரணத்தில் பொன்னாங்காணி செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நுகர்வைப் பொறுத்தவரையில் இலை மரக்கறிகளில் முளைக்கீரைக்கு அடுத்தபடியாக பொன்னாங்காணி தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துள்ளது.

2009ஆண்டு இப் பொன்னாங்காணிப் பயிர் இனங்காணமுடியாத ஒரு பூச்சியின் தாக்கத்தினால் தாக்கப்படுவதினை விவாசாயிகளும் இப்பூச்சி தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது இருப்பதாக விவசாய திணைக்களத்திடம் தெரிவித்தனர்.

விவசாய விரிவாக்க பகுதி, விவசாய ஆராய்ச்சிப் பகுதி, விவசாய பீட உயிரியற்துறை என்பன உடனடியாக நடவடிக்கையில் இறங்கி மாதிரிகளை சேகரித்து ஆய்வுகளை மேற்கொண்டன.

இதன் பயனாக பொன்னாங்காணியில் தாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சி டெல் பேசிடே (Delphacidae) குடும்பத்தை சேர்ந்த ஹமாலியா ஹெயிடென்சிஸ் ஒதோ (Hamalia haitensis otho) எனும் விஞ்ஞான பெயரைக் கொண்ட ஒரு தத்தி வகையை சார்ந்த தாவரத்தத்தியாகும் என பல்கலைக்கழகத்தின் விலங்கியற்துறையினால் அடையாளம் காணப்பட்டது.

### இதன் நிறைவுடலிகள்

- கரியநிறமானவை
- 3.1-3.3 மி.மீற்றர் நீளமானவை
- ஆப்பு வடிவானவை
- இறகற்றன மற்றும் இறகுள்ளன என இரு உருவமைப்புக்கள் கொண்டவை.
- குத்தி உறிஞ்சும் வாயுறுப்பை கொண்டவை
- கட்டையான உணர்கொம்புகள் கொண்டவை.

### பூச்சியின் தாக்கம் எவ்வாறு இருக்கும்?

- தாவரச்சாற்றைத் தொடர்ச்சியாகக் குத்தி உறிஞ்சும்.
- சாற்றை உறிஞ்சும் போது நச்சுப்பதார்த்தம் தாவரத்தினுட் செலுத்தப்படும்
- தாவரத்தின் இலைகள் மஞ்சளாகும்
- இலைகள் கருகி இறந்து உதிரும்
- இறுதியில் தண்டுகள் உலர்ந்து வைக்கோல் போலாகும்.


இத்தாக்கம் தத்தி எரிவு எனப்படும். ஆரம்பத்தில் ஒரு வித்திலை தாவரங்களை விருந்து வழங்கியாகக் கொண்டு தனது வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்து அவற்றில் சேதத்தை ஏற்படுத்திய இத்தாவரத்தத்திகள் தற்போது இருவித்திலைத்தாவரங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவை நோயாக்கிகளைக்காவும் காவிகளாகவும் தொழிற்படுகின்றன.

### தாக்கத்தின் வேகமும் குடித்தொகைப்பெருக்கமும்

தாக்கத்தின் வேகமும் உக்கிரத்தன்மையும் பயிர்களின் வகை குடித்தொகைப் பெருக்கம் என்பவற்றில் தங்கியுள்ளது.

அதிகளவு சாரீரப்பதனும் பயிரடர்த்தியும் தத்திகளின் விரைவான குடித்தொகைப் பெருக்கத்துக்கு மிகவும் சாதகமான காரணிகளாகும்.

இயற்கையில் குறைந்த எண்ணிக்கையில் காணப்படும் இப்பூச்சிகள் பெருகி வாழ்வதற்கு சூழலும் அங்கு கிடைக்கும் உணவும் ஏதுக்களாக அமைகின்றன.




விவசாயச் சூழல் தொகுதியில் ஏற்பட்ட மாற்றங்களினாலும் தொடர்ச்சியான பீடை நாசினிப் பாவனையால் இயற்கை எதிரிகள் அழிந்து போகின்றமையினாலும் யூரியா, அமோனியம்சல்பேற் போன்ற நைதரசன் வளமாக்கிகளின் மிதமிஞ்சிய பாவனையாலும் இப்பூச்சிகள் தப்பி வாழ்ந்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### முகாமைத்துவ முறைகள்

01. தொடர்ச்சியாகப் பொன்னாங்காணியில் இவை தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஒரு போகத்திற்கு தற்போது பொன்னாங்காணி செய்கை பண்ணும் வயல்களில் பொன்னாங்காணிச் செய்கையை விட்டுச் சுழற்சி முறையில் மாற்றுப்பயிர்ச் செய்கை செய்து பின் பொன்னாங்காணிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும்.

2. யூரியா,அமோனியம் சல்பேற் போன்ற நைதரசன் பசளைகளை மிதமிஞ்சிப் பாவிப்பதைத் தவிர்க்கவும். இதன்மூலம் பூச்சிகளுக்கு கிடைக்கும் உணவின் அளவைக் குறைக்க முடியும்.

3. பொன்னாங்காணி வெட்டுத்துண்டங்களை வெட்டி எடுத்து தனியான இடத்தில் நாட்டி செறிவான பராமரிப்பின் கீழ் பெருக்கியபின் மீண்டும் நடுகை செய்யவும். இதன் மூலம் தொற்று அற்ற துண்டங்கள் மூலம் நடுகை மேற்கொள்ள முடியும்.

4. மாசி மாதத்திலேயே கூடிய தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளதால் பொன்னாங்காணிச் செய்கையை மேட்டு நிலத்திற்கு மாற்றவும். இதனால் தாக்கத்திற்கான சாதகமான நிலையினைத் தவிர்க்க முடியும்.

5. பாதிக்கப்பட்ட பொன்னாங்காணியை முற்றுமுழுதாக வெட்டி அகற்றிய பின்னர் இமிடாகுளோபிறிட் பூச்சி நாசினியை 10 மில்லி லீற்றர் 10 லீற்றர் நீர் என்னும் அளவில் கலந்து, வெட்டியபின் மீதமாகவுள்ள தண்டுகள் யாவும் நன்றாக நனையும்படி விசிறவும்.

இலைமரக்கறிகள் குறைந்த அறுவடை இடைவெளியைக் கொண்டிருப்பதால் காபோபியூறான் போன்ற பயிரில் நீண்ட நாட்களுக்கு இருக்கக்கூடிய நஞ்சு கொண்ட பூச்சிநாசினிகள் பாவிப்பதைத் தவிர்க்கவும்

**க.தனபாலசிங்கம்**
பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர்ப்பாதுகாப்பு),
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி)
அலுவலகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி தின அழைப்பும்

## அமரர் திரு. கதிரவேலு ஆறுமுகம்

(இளைப்பாறிய அதிபர்)



நித்தம் நித்தம் அறிவுரைகள்
நீர் புகட்டிப் போனீரே
நின் பிரிவால் நாம் துடித்து
நிலை குலைந்து போனோமே
நிலையில்லா வாழ்விதென
நிலையுணர்த்திப் போனீரே
நின் கூற்றுத் தொழுதேற்று
நின்வழி நாம் நடப்போமே

19-10-2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது பாசமிகு தந்தை, அமரர் உயர்திரு கதிரவேலு ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அந்தி யேட்டிதின மதியபோசன நிகழ்வு 20-11-2011 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணியளவில் சங்கரத்தைப் பத்திரகாளி கோவில் அருகாமையிலுள்ள வட்டு இந்து வாலிபர்சங்க (YMHA) மண்டபத்தில் இடம்பெறும்.

மரண நிகழ்வுகளிற் கலந்து கொண்டவர்களிற் சிலரைத் தொடர்பு கொண்டு தனிப்பட்ட அழைப்பு வழங்கத் தவறியமைக்கு வருந்துவதோடு, அவர்கள் அனைவரையும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்விற் கலந்து கொள்ளுமாறு பணிவன்போடு வேண்டுகின்றோம்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:-
குடும்பத்தினர். (Dr.ஆ.காந்தநேசன்)

(6812)

## சமாதான பேச்சுக்களை தோற்கடிக்க ஜே.வி.பி. முக்கிய பங்காற்றியது

### விஜித ஹேரத் தெரிவிப்பு

இலங்கையில் நோர்வே மேற்கொண்ட சமாதான பேச்சுவார்த்தைகளும் சமாதான செயற்பாடுகளும் வெற்றியளிக்க போவதில்லை என்று எங்களுக்கு முன்கூட்டியே தெரியும். அதனால்தான் நோர்வேயின் தேவையை இலங்கையில் நிறைவு செய்வதற்கு இடமளிக்க விரும்பாமல் நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைகளை தோற்கடித்தோம்.

அந்தவகையில் நோர்வே அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய மக்கள் விடுதலை முன்னணியே பாரிய பங்காற்றியது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகளின் தோல்வி தொடர்பில் நோர்வே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனால் அந்த அறிக்கையை நாங்கள் இன்னும் ஆராயவில்லை.ஆராய்ந்து முடிந்ததும் அது தொடர்பில் கருத்து வெளியிடுவோம் என்றும் குறிப்பிட்டார். (அ-2)

## போர்ச் சூழலால் பல்கலைக்கழகத்திற்கு செல்ல முடியாதவர்களுக்கு சட்டஉதவி ஆணைக்குழு உதவி

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினர் 1999ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை உள்ள காலத்தில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கான புள்ளிகளைப் பெற்றிருந்தும் போர்ச் சூழல் காரணமாக, அனுமதி கோரமுடியாதிருந்த மாணவ, மாணவிகளுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பரீட்சைக்குத் தோற்றிய வலயம், வருடம், பாடங்கள், சுட்டெண், பெறுபேறு புள்ளிவிபரம், அனுமதி பெற்ற பல்கலைக்கழகம், வருடம், பல்கலைக்கழக அனுமதியை பெறுவதற்குரிய வழிமுறைகளை பின்பற்றியமைக்குரிய காரணம் ஆகிய விபரங்களை Colombo luc@gmail.com என்ற இணைய முகவரியூடாக அனுப்பலாம்.

அல்லது சட்ட முகாமையாளர், இலங்கை சட்ட ஆணைக்குழு, ஹல்ஸ்டொப் வீதி கொழும்பு-12 என்ற தபால் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கலாம்.

தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் பல்கலைக்கழக அனுமதி திட்டம் எனக் குறிப்பிடும் படியும் மேலதிக தவல்களுக்கு 0113137153 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் இணைந்த சேவைக்குள் மாத்திரமன்றி ஆசிரிய சேவைக்குள்ளும் உள்வாங்கப்படல் வேண்டும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் எம்.அனஸ் அனுப்பி வைத்துள்ள அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நாடெங்கும் உள்ள பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டு இதுவரை வேறு பதவிகளுக்கு உள்ளீர்க்கப்படாதுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், திட்டமிடல் நிதியுதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் அனைவரையும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக பதவி உயர்வுகள் எதுவுமின்றியும் சேவை மாற்றம் கூட மறுக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கும் இப்பட்டதாரிகளுக்கு விமோசனமளிக்க கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர தயாரித்துள்ள தனியான சேவைப் பிரமாணக் குறிப்புடன் கூடிய இணைந்த சேவை உத்தியோகத்தர் திட்டத்தை எமது சங்கம் வரவேற்கின்றது. அதேவேளை இவர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படவும் கல்வி அமைச்சு அனுமதிக்க வேண்டும் எனவும் கோருகின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 2005 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் நியமனம் பெற்ற பட்டதாரிகள் சுய விருப்பத்தின் பேரில் பல தடவைகளில் ஆசிரியர்களாக உள்ளீர்க்கப்பட்டு பதவி உயர்வுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் நியமனம் பெற்றவர்கள் இதுவரை சேவை மாற்றம் எதற்கும் அனுமதிக்கப்படாது பதவி உயர்வுகள் எதுவுமின்றி மிகுந்த வேதனையுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே 1996 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பட்டதாரிகளுக்கு பொருத்தமான பதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்பட்டு இதுவரை வேறு பதவிகளோ, பதவி உயர்வுகளோ இல்லாது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கும் திட்டத்தில் ஆசிரியர் சேவைக்கு செல்லவும் வாய்ப் பளிக்கப்படல் வேண்டுமெனக் கோருகின்றோம் எனவும் கூறப்பட்டுள்ளது. (அ-2)

## கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலகல்ல பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 4 ஆயிரத்து 400 லீற்றர் கசிப்பு அடங்கிய 20 பீப்பாய்களையும் வெற்று பீப்பாய்கள் இருபதினையும் மீட்டதாகவும் குறித்த சந்தேகநபரை இன்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிமால் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# நோர்வே காலங்கடந்தேனும் இலங்கையை புரிந்து கொண்டது

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் நோர்வேக்கு காலம் கடந்த ஞானம் பிறந்துள்ளது. இதனூடாக இந்தியாவின் முகத்திரையும் கிழிக்கப்பட்டுள்ளது. எனவே இனியாது மேற்குலக நாடுகள் இலங்கை விவகாரங்களில் இதயசுத்தியுடன் செயற்பட புலிகளை மிதமிஞ்சியளவில் எடைபோட்டமை இந்தியாவும் மேற்குலக நாடுகளும் செய்த மிகப்பெரிய தவறாகும்.

ஆகவே கூட்டமைப்பு உட்பட மீண்டும் பிரிவினைவாதத்திற்கு துணைபோகும் சக்திகளுக்கு சர்வதேச நாடுகளின் தடைவிதிக்கப் படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில், இலங்கையில் இருந்து தவறான தகவல்களை பெற்றுக் கொண்டு கடந்த காலங்களில் நோர்வே அரசாங்கம் உள்நாட்டுக்கு எதிரான வகையில் செயற்பட்டது. குறிப்பாக போர் நிறுத்த ஒப்பந்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது மத்தியஸ்தம் வகித்த நோர்வே, இலங்கை அரசாங்கத்தை குறைத்தே மதிப்பிட்டது. இதனால் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச அழுத்தங்களும் கூடியது.

ஆனால் அத்தனை சவால்களையும் எதிர் கொண்டு புலிகளுக்கு எதிரான வெற்றியை நாம் பெற்றுக் கொண்டோம். உண்மையிலேயே இந்தியா செய்யவேண்டியதைத்தான் இலங்கை அரசாங்கம் செய்து முடித்தது. ஏன் என்றால் இந்திய அரசியலிலும் சரி, அங்கு காணப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையிலும் சரி புலிகள் பாரியளவில் செல்வாக்கு செலுத்தி வந்தனர். இது அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஆனதாகவே அமைந்தது.

இக்காலப்பகுதியிலும் கூட இந்தியா இரட்டைவேடம் பூண்டதை நோர்வே வெளிப்படுத்தியுள்ளது. உண்மையான சூத்திரதா[illegible]ள் தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளனர். எவ்வாறாயினும் நோர்வே, காலம் கடந்தேனும் இலங்கையைப் புரிந்து கொண்டமை வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

எதிர்காலத்தில் புலிகளின் ஆதரவாளர்களை தமது நாடுகளில் செயற்படவிடாது வெளிநாடுகள் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# மீள்குடியேற்றத்திற்காக 1336 மில்லியன் ஒதுக்கீடு

## கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 97 வீதமானோர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். மேலும் 3 ஆயிரத்து 110 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட உள்ளதோடு மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக ஆயிரத்து 336 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட தீர்மானம் அறிவிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவில் ஆயிரத்து 672 குடும்பங்களும் திருகோணமலை மூதூர் பகுதியில் ஆயிரத்து 272 குடும்பங்களும் மன்னாரில் 166 குடும்பங்களும் மீள்குடியேற்றப்படவுள்ளனர். (அ-2)

# துமிந்தவை சிகிச்சைக்காக நாம் அனுப்பவில்லை

## அரசாங்கம் மறுப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்தவை நாம் வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை. எமக்கு ஒன்றும் தெரியாது. அவருடைய குடும்பத்தினரே சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபைக்குள்ளிட்ட 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு தினமான கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பாரத லக்ஷ்மன் பிரேம சந்திரன் படுகொலை செய்யப்பட்டதுடன் சம்பவத்தில் துமிந்த சில்வா படுகாயமடைந்தார்.

அவர் ஸ்ரீ ஜயவர்த்தன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இவ்வாண்டில் நாற்பது கோடி பெறுமதியான தங்கம், வெளிநாட்டு நாணயத்தாள்கள் மீட்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்ல முயன்ற சுமார் 40 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்கள், தங்கம் போன்றவற்றை இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரையிலான காலப்பகுதியில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக கொண்டுசெல்ல முயன்ற வெளிநாட்டு நாணயத்தாள்கள், தங்கக் கட்டிகள், தங்க நாணயங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் போன்றவற்றையே இவ்வாறு கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகநபர்கள் பலரையும் கைது செய்து சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய சுங்கப் பிரதிப்பணிப்பாளர் சட்டத்தரணி எம். ஆர்.ராஜ்மோகன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களுள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க பிரஜைகளும் அடங்குகின்றனர். அவர்களில் பலருக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் செலுத்த முடியாதவர்களுக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





சிறுப்பிட்டி இ.த.க பாடசாலையின் வகுப்பறை கட்டட திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்று அழைத்து வரப்படுவதனையும், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வகுப்பறை கட்டடத்தை திறந்து வைப்பதனையும், அருகில் பாடசாலை அதிபர் எஸ். தேவராஜா, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் நிற்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# யாழ்.கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களின் அழகியல் போட்டி முடிவுகள்

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களிடையே நடாத்தப்பட்ட அழகியல் போட்டி முடிவுகள் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**சித்திரப் போட்டி**

**பிரிவு I**

சி.தர்மிலன் (யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை) ,ச.அலஸ்ரீனா (யா/ இளையதம்பி இந்து வித்தி, த.சானுஜன் (யா/நல்லூர் ஞானோதய வித்தி

**பிரிவு II**

ச.மயூரி- (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), த.அனுஜன் (யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), ந.யோசுவா (யா/ கோப்பாய் மகா வித்தி

**பிரிவு III**

செ. லாவண்ஜா (யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை), சூ.துர்க்காஜினி(யா/ நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), சு.அலிஸ் ஆஷிகா (யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை)

**பிரிவு IV**

இ.கஜன் (யா/நல்லூர் ஆனந்த வித்தி, சி.சலேற்மரியா (யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), கு.திபாகரி (யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்)

**பிரிவு V**

சி.டிலானி (யா/ முத்துத் தம்பி மகா வித்தி, உ.தனுசன் (யா/முத்துத்தம்பி மகா வித்தி, சி.நிக்ஷன் (யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தி

**பிரிவு VI**

ஜெ.மகிழ்தினி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி),சி.ரோஹுஷன் (யா/முத்துத்தம்பி மகா வித்தி, ஜெ.சதுர்த்தன் (யா/கொக்வில் கிழக்கு நாமகள் வித்தி

**பிரிவு VII**

அ.கிஷான் (யா/ சென்.ஜோசெப் வித்தி, அ.அன்ரனிதாஸ் (யா/சென்.ஜோசெப் வித்தி, சி.சியாஜினி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

**பிரிவு VIII**

இ.விதுஷன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), கி.தவகீதா (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), சோ. கோகிலவதனி (யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி

**பிரிவு IX**

அ.அன்ரனிதாஸ் (யா/கோப்பாய் மகா வித்தி, நா. டிலூஜன் (யா/முத்தும்பி மகா வித்தி, யோ.தனுசன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

**தனிப்பாடல்**

**பிரிவு I**

ச.அலஸ்ரீனா (யா/ இளையதம்பி இந்து வித்தி, சி.சர்மிலன் (யா/ நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை), உ.கபீனா (யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி

**பிரிவு II**

சோ.விஷ்ணுவன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), சு.அலிஸ் ஆஷிகா (யா/ கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை), செ.லாவண்ஜா (யா/கோப்பாய் தெற்கு றோ.க. த.க. பாட சாலை)

**பிரிவு III**

கோ.சிரோன் பிரவீணா (யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), ச.நிவர்த்திகா (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி, அ.கஜானி (யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி

**பிரிவு IV**

சோ. கோகிலவதனி (யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி,இ.குகாஜினி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜெ.லவசுயன் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)

**தனிநடனம்**

**பிரிவு I**

யோ.அருண்யா (யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பா), க.றபேக்கா (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), சூ.துர்க்காஜினி (யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை)

**பிரிவு II**

சு.அலிஸ் ஆஷிகா (யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை), ச.மயூரி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ர.விவேதா (யா/ஊரெழு கணேச வித்தி

**பிரிவு III**

அ.கிஷான் (யா/கொழும்புத்துறை சென்.ஜோசெப் வித்தி, ச.நிவர்த்திகா (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி, அ. கஜானி (யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி,

**பிரிவு IV**

இ.குகாஜினி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

**குழுநடனம்**

(யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

**நாடகம்**

(யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

# சாரணர் பயிற்சி

(மல்லாவி)

சாரணர் பயிற்சி கலைக்கூறு-2 பயிற்சியானது நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சியானது சாரணர் பயிற்சி கலைக்கூறு -1 ஐ பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு நடைபெறவுள்ளதெனவும் பெயர் குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட ஆசிரியர்களை தவறாது இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார்.

(அ-3-15)

# வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு

(வவுனியா)

செட்டிக்குளம் கதிர்காமர் நிவாரணக் கிராமத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் 11 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

லொறியொன்றில் மோதி பலத்த காயமடைந்த சிறுமி செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் நேற்றைய தினம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

(அ-2)

# இரட்டைக் குடியுரிமையுடைய இலங்கையருக்கு அ.அட்டை

இரட்டை குடியுரிமையுடைய இலங்கையர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.இலங்கை பிரஜையாக இருந்து பின்னர் இரட்டை குடியுரிமை பெற்றுக்கொண்டவர்களுக்கு இந்த விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இலங்கை ஆட்பதிவு திணைக்களத்தினால் விசேட அடையாள அட்டை விநியோகம் செய்யப்படவுள்ளது. அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர் அல்லது பிரதேச செயலாளர்களின் ஊடாக தேசிய அடையாள அட் டை பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்ய முடியும்.

இரட்டை குடியுரிமை பெற்றுக் கொண்டவர்களுக்கு அடையாள அட்டை விநியோகம் செய்யும் நோக்கில் தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இரட்டை குடியுரிமை உடையவர்களுக்கு இலங்கை பிரஜைகள் என்பதனை உறுதி செய்வதற்கான எந்தவொரு ஆவணமும் வழங்கப்படவில்லை எனவும் முதல் தடவையாக இவ்வாறு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டை குடியுரிமையுடைய பலர் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்ற நிலையில் இவர்கள் குறித்த அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவார்களா என்பது கேள்விக்குறியே என அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01. | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும். | 18.12.2011 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை-030 |
| 02. | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவை நிலையமும். | | |
| 03. | யாழ். பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும். | | |
| 04. | நெல்லியடி | | |
| 05. | அச்சுவேலி | | |
| 06. | சங்கானைக் கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 07. | சுன்னாகக் கிளையும், கோப்பாய் சேவை நிலையம்மும் | | |
| 08. | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 09. | வல்வெட்டித்துறை | | |
| 10. | யாழ். பல்கலைக்கழகக் கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 11. | யாழ். கன்னாதிட்டிக்கிளையும் , இணுவில் சேவை நிலையமும் | | |
| 12. | பருத்தித்துறைக் கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |


அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
2011.11.16

(சி-4985)





யாழ். மாவட்டத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவஸ்ரீ உரையாற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ,யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காசோலை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# விற்பனைப் புரள்வு வரியை மத்திய அரசாங்கம் அறவிடும்

(கொழும்பு)

கிழக்கு மாகாண வரி அறவீட்டு அலுவலகங்கள் மூடப்படவுள்ளன. எதிர்வரும் காலங்களில் விற்பனை புரள்வு வரியை மத்திய அரசாங்கமே அறவீடு செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளினால் இதுவரை காலமும் விற்பனை புரள்வு வரி அறவீடு செய்யப்பட்டது.

விற்பனை புரள்வு வரி அறவீடு செய்யும் நடவடிக்கைகளை மாகாண அரசாங்கங்கள் பொறுப்பேற்கும் வகையிலான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

சில மாகாண சபைகளின் கீழ் இயங்கி வந்த வரி அறவீட்டு நிலையங்கள் மூடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கிழக்கு மாகாண வரி அறவீட்டு அலுவலகங்களை மூடுவது தொடர்பான யோசனைத் திட்டம் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விற்பனை புரள்வு வரியை அறவீடு செய்யும் பணிகளை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டால் மாகாண சபைகளுக்கு வரி அறவீட்டு அலுவலகங்கள் தேவைப்படாது என கிழக்கு மாகாண சபை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வரி அறவீட்டு பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் வேறும் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, இந்த நடவடிக்கையின் மூலம் வரி அறவீடு செய்யும் அதிகாரிகளின் வேலைப்பளு குறைவடையும் என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் தெரிவித்துள்ளார்.

எனினும் வரி அறவீட்டு அலுவலகங்கள் மூடிவிடும் திட்டம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த நடவடிக்கையின் மூலம் மாகாண சபைகளின் வருமானம் குறைவடையும் என மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சஞ்சீவ கவிரட்ன தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையினால் மாகாண சபைகள் சுமார் 40 வீதமான வருமானத்தை இழக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அகில இலங்கை வரி அறவீட்டாளர் தொழிற்சங்கம் இன்று கொழும்பில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. அரசாங்கம் தமது தொழிலுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் தமக்கு நிவாரணங்கள் அளிக்கப்பட வேண்டுமென கோரியுள்ளனர். (அ-2)

# போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசைத் தினத்தையொட்டி நடத்தபடும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி-2011 நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் சமுகமளிக்கும்படியும் அன்றையதினமே சுட்டெண் வழங்கப்படும் எனவும் சைவ பரிபாலன சபைச் செயலாளர் த.மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். (அ-2)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்பினரும் இணங்கியதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது குறித்து கட்சித் தலைவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# உணவு பாதுகாப்பை கண்காணிக்க தகவல் மையமொன்று நிறுவப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலங்களில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் பொருட்களை சாதாரண விலையில் வைத்துக்கொள்ளல் உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உணவு பாதுகாப்பை கண்காணிப்பதற்கு விவசாய தகவல் மையமொன்றை எதிர்காலத்தில் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்க்கை செலவு முகாமைத்துவ குழு ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் கூடிய போதே அவர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திவி நெகும வேலைத்திட்டத்தின் மூலமாக மரக்கறி மற்றும் பழவகைகள் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமன்றி தேசிய பால் உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்காக சரியான வேலைத்திட்டங்களை தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கடந்த சில மாதங்களில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் லக் சதொச விற்பனை நிலையத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். அந்த செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேம்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் உணவு பாதுகாப்பை கண்காணிப்பதற்கு விவசாய தகவல் மையமொன்றை எதிர்காலத்தில் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்வரும் பண்டிகை காலங்களில் அத்தியாவசிய பொருட்களை களஞ்சியப்படுத்தி கொள்ளல் மற்றும் அப்பொருட்களை சாதாரண விலையில் வைத்துக் கொள்ளல் உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

இதேவேளை, இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ பொருட்களை பொதியிடல், மேம்படுத்தல் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக மரக்கறி மற்றும் பழவகைகளின் விலையை ஒரு மட்டத்தில் வைத்துக் கொள்ள முடிந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

பிளாஸ்டிக் பொதியிடலை சட்டமாக்குவதன் தற்போதைய நிலைமை தொடர்பில் எடுத்தியம்பிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ நகர பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களின் செயலாற்றுகை தொடர்பிலும் எடுத்தியம்பினார். (அ-2)

# விண்ணப்பம்கோரல்

நீதி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள அபிவிருத்தி உதவியாளர் பதவி I இற்காக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை நீதியமைச்சு கோரியுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முனனராகவோ செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

✧✧✧✧✧✧✧

தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் பதவி வகுப்பு III இற்கான ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை-2011 இற்கு தொழில் திணைக்களம் விண்ணப்பங்களை கோரி யுள்ளது.

இப்பதவிக்காக சிங்கள மொழிமூலப் பதவிக்கு-7 பேரும் ஆங்கில மொழி மூலப் பதவிக்கு-3 பேருமாக வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகளாக இலங்கை பிரஜைகளாக இருப்பதோடு விண்ணப்பதாரர் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறைவடையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அத்தோடு கல்வித் தகைமைகளாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் முதல் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தலுடன் மூன்றாம்தர மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றில் 6 மாத கால தட்டெழுத்து மற்றும் கணனித் தட்டெழுத்து நெறியினை விண்ணப்பிக்கும் மொழியில் கற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக 350 ரூபாவை தேசிய தொழில் கல்வி நிறுவனத்தின் பெயரிலுள்ள நுகேகொட, இலங்கை வங்கிக் கிளையின் கணக்கு இலக்கமான 0771451995 இல் வைப்பிலிட்டு அப்பற்றுச் சீட்டினை ஒட்டிய விண்ணப்பத்தினை தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் தொழில் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை-2011 எனக் குறிப்பிட்டு ஆணையாளர் நாயகம், தேசிய தொழில் கல்வி நிறுவகம், இல.318, ஹை-லெவல் வீதி, கொழும்பு-06 எனும் முகவரிக்கு எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பக் கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்திலோ அல்லது இன்றைய வர்த்தமானியிலோ பார்வையிட முடியும். (அ)

# ஐ.தே.க. உறுப்பினருக்கு பிரதி கல்வியமைச்சர் பதவி?

(கொழும்பு)

பிரதிக் கல்வி அமைச்சர் பதவி ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வார் எனவும் அவருக்கு பிரதிக் கல்வி அமைச்சர் பதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு பல தடவைகள் அரசாங்கம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரபல வர்த்தக நிறுவனமொன்றை நடத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தின் தலையீடுகளை தவிர்ப்பதற்காக ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஜனாதிபதி பதவிப் பிரமாண தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதானம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தினத்தை முன்னிட்டு மாபெரும் அன்னதான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அநுராதபுரம் பிரதேசத்தில் இந்த மாபெரும் அன்னதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம் ருவன்வெலிமாஹசேயா, ஜய ஸ்ரீமா போதி உள்ளிட்ட முக்கிய பௌத்த மத தளங்களில் வழிபாடு செய்ய வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

சுமார் ஓராண்டு காலம் தொடர்ச்சியாக பக்தர்களுக்கு பகல் போசனம் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

நாளை இந்த இலவச பகல் போசன விருந்துபசாரம் ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். (அ-2)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 37

## பில்லி சூனியம்

உங்கள் மனதில் பயத்தை உருவாக்கி விட்டால், உங்களுக்கு இன்னொருவர் தீங்கு செய்யத் தேவையில்லை, உங்களுக்குள் பயம் வந்துவிட்டால், இன்னொர் எதிரி உங்களுக்குத் தேவையில்லை. சமூகத்தில் நிறைய மனிதர்கள் பயத்தால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பயத்தினை உங்களுக்குள் உருவாக்கவில்லை யென்றால், உங்களுக்குள் பயத்தை உருவாக்கியவருடைய தொழில் செழிக்காது. எனவே நீங்கள் வீட்டை இப்படிக்



கட்டினால், அப்படியாகிவிடும். இந்தக்கல் வைத்த மோதிரத்தைப் போட்டால் வாழ்க்கை மோசமாகி விடும் என்றெல்லாம் பலவிதமான பயங்களை உருவாக்கி அவர்களுடைய வியாபாரத்தைச் செழிப்பாக்கி கொண்டார்கள். எந்தவிதமான சூழ்நிலைக்குள் நீங்கள் ஆட்பட்டாலும் அங்கே எத்தகைய சக்தி சூழல் இருந்தாலும் நம்மைச் சுற்றியுள்ள மக்களின் நோக்கம் எப்படியிருந்தாலும் தியானத் தன்மை நமக்குள் உருவாகி விட்டால், வெளியிலுள்ள சூழ் நிலை நம்மை எந்த விதத்திலும் பாதிக்காது. தியானத்தன்மை நமக்குள் வந்து விட்டால் நம்நோக்கம் என்னவோ அதன்படி செயற்பட முடியும். இன்னொருவரின் பின்னால், செல்லும் சூழல் இருக்காது.

கௌதம புத்தரிடம் பூர்ணான் என்றொரு சீடர் இருந்தார். அவர் ஒரு நாள் "ஸ்ரோணப் பிராந்தியத்திற்குச் சென்று தியானம் சொல்லிக் கொடுக்கப் போகிறேன்" என்றார். ஸ்ரோணப் பிராந்தியம், ஆன்மீக வழிமுறைகள் எதையும் போதிக்க முடியாத இடம். ஆன்மீகத்தை அங்குள்ள மக்கள் மிகவும் கடுமையாக எதிர்த்தார்கள். போதிப்பவர்களை கடுமையான பாதிப்பிற்கு உள்ளாக்கினார்கள் எனவே பூர்ணான், ஸ்ரோணப் பிராந்தியம் செல்வதாகச் சொன்னவுடன் புத்தர் "அங்குள்ள மக்கள் மிகக் கடுமையானவர்கள், இம்சிப்பார்கள் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

பூர்ணான் "எனக்குத் தெரியும். அதனால்தான் அங்கே செல்கிறேன், அவர்களுடைய தன்மையை மாற்றப் போகிறேன்" என்று கூறினார். கௌதம புத்தர் "அங்கே சென்றால், அவர்கள் மோசமாகத் திட்டுவார்கள். நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார். பூர்ணான் "நான் அவர்களுக்கு நன்றி சொல்வேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்காமல் திட்டத்தானே செய்தார்கள்!" என்றார். புத்தர், "அவர்கள் அடித்தால், என்ன செய்வாய்?" என்று கேட்டார். பூர்ணான், "நான் நன்றி சொல்வேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்கத்தானே செய்தார்கள், கொல்லவில்லையே!" என்றார். புத்தர் "உன் உயிரை எடுத்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டார் அதற்கு பூர்ணான், "நான் நன்றிதான் சொல்வேன் ஏனென்றால், இந்த உடல் கட்டுப்பாட்டில் இருந்து என்னை விடுவித்து விட்டார்களே!" என்றார். அப்போது கௌதமர் சொன்னார் "சரி, நீ எந்த பிராந்தியத்தில் வேண்டுமானாலும் போய்த் தியானம் சொல்லிக் கொடு, அதற்கான திறமை உன்னிடம் இருக்கிறது." என்று ஆசீர் வதித்து அனுப்பினார்.

எனவே மனிதனுக்குள் தியானத் தன்மை வந்துவிட்டால், யாருடைய நோக்கம் எப்படியிருந்தாலும், சக்தி சூழல் எப்படியிருந்தாலும் அவற்றால், அந்த மனிதனுக்குள் எந்தப் பாதிப்பும் வராது. தியானத் தன்மையில் இருக்கும் போது பில்லி, சூனியம் ஏவல் போன்றவை உங்களை தொட வாய்ப்பில்லை.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்

03

**தூய தமிழ்:**

மச்சரேகைச் சித்தர் காலங்குடி மிருப்பு அப்துல் வாரிது ஆலிம் மௌலானா ஜதுருஸின் பாடல்கள், இளையான்குடி பூ.மு.முஹம்மது மஸ்தான் சாகிபு போன்றவர்களின் பாடல்கள் அரபுச்சொற்கள் கலவாத தூயதமிழ் சொற்களால் ஞானம் பகருவன. பூ. மு. முஹம்மது மஸ்தானின் பல பாடல்கள் அச்சு வாகனம் ஏறாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

**நாட்டுப்புறச் செல்வாக்குடைய இலக்கிய வடிவங்களில் ஒரு மாற்றுப்போக்கு:**

சிந்து, கும்மி, ஏசல், தாலாட்டு, சாய்ந்தாட்டுப்பா, ஒப்பாரி, குறம், கப்பல்பாட்டு, ஊஞ்சல், தெம்மாங்கு போன்ற நாட்டுப்புறச் செல்வாக்குடைய வடிவங்களின் ஞானம் பகரும் எளிமை, இனிமை நிறை இலக்கியங்கள் பல.

சதகம், திருப்புகழ், மஞ்சரி, மாலை, புகழ்ச்சி அந்தாதி, கீர்த்தனை வெண்பா, கண்ணிகள், புலம்பல் தூது போன்ற வகைகளும் ஞானம் பிலிற்றும் மாற்றுப் போக்காக வடிவம் பெற்றுள்ளன என்பது இவண் குறிப்பிடத்தக்கன.

**இசைத் தொண்டு:**

ஞானத்தமிழ் இலக்கியங்களில் பல கீர்த்தனைப் பாடல்களாக, பதங்களாக இனிது இலங்குகின்றன. செஞ்சுருட்டி, சங்கராபரணம், சரசாங்கி, காபி, ஆனந்த பைரவி, சஹானா, அபுரூபகம், நீலாம்பரி , தேசிகத் தோடி, முஹாரி தாமஸ் போன்ற பலவகை இராகங்கள் உள்ளன.

**ஞானியர் சமரசப்பார்வை:**

அய்யம் பேட்டை அப்துல் கனி ஆனந்தக் களிப்பில்,

"சாதியின் வேற்றுமை ஏது-இந்தத்
தாரணி மாந்தர்கள் காற்றில் சூது
வேதியர் காட்டிய வாது- இதை
விட்டுப் பொதுநிலைமீது கொண்டு
ஓது" (69)

என்றும் சாகுல் ஹமீது அப்ப நாயகம் பாடிய சமரசச்சின்ப மயானந்த ஞான முகப்பூவில்

"ஒருகுலம் உயர்ந்ததென்றும்
ஒரு குலம் தாழ்ந்ததென்றும்
பிரிவுள்ள உலகத்தோர்கள்
பகருவார் பெருமையாக
நெறிமனுவெல்லாம் ஒன்றே
நிறைந்தோனைத் தினம்தொழுது
திருவருள் வடிவைக் கண்டோர்
ஜெயமுயர் குலமதாமே"

என எது குலப்பெருமை? என மொழிகிறார்.

**அரபு அகர எழுத்துக்கள்:**

ஞான வாக்கியத்தில் அலிபு,பே அரபு எழுத்துக்கள் இருபத்தி எட்டினையும் அமைத்துப் பாடிய முனாஜாத்து அறுசீர்க்கழிலடி ஆசிரிய விருத்தங்களால் ஆனது. கோட்டாறு ஞானியரடிகளின் "ஞான வேதாட்சர வருக்கம்" முப்பத்தியொன்று பாடல்களில் அலிப அகர எழுத்துக்களில் அறுசீர்தாளிசையால் ஞானம் பகருகிறது.

தொழுகை நிலை: அரபு எழுத்துக்கள்:

தொழுகையின் பல்வேறு நிலைகளை- அரபு எழுத்துக்களான - அலிபு- ஹே -மீம் -தால் எழுத்துக்களுக்களுக்கு ஒப்பிட்டு குறியீட்டுப் பொருளாக நூஹ்(ஒலி) வேத புராணத்தில்,

"இந்தத் தொழுகையில் நிலை
அலிபாம்
ஏகன்றுக்கூவுதான் ஹே யாகுமென்னும்
சந்தேகமில்லா சூசீது மீமாம்
தால் அத்தஹியாத்தாமெனவே
முந்தியிரு மூச்சைச் சொல்லுகுவன் கேள்
முதலாமலிகுதான் ஷீ அத்தென்றே
சிந்தை உறவாடும் இசுலாமுடன்
தெளியவொரு ஹே யுமுஹப்
பத்தாமே"(- தொழுகைப்படலம்:11)

எனப்பாடியுள்ளார். இதனை சாகுல்ஹமீது அப்பநாயகம் ஞான அலங்காரம் -புராண மெஞ்ஞான நூறிலும் பாடுதல் காணலாம்.

**பிஸ்மில் குரம்:**

"பீராப்பாவின் பிஸ்மில்குரம் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிற்ரஹீம்" எனப்பத்தொன்பது எழுத்துக்களின் அருமை பெருமைகளைப் பேசுகிறது. உயர்வான ஓர் எழுத்துக்கும் ஓரறிவு உண்டு என மணிமந்திரக் கலிமாவின் எழுத்துக்களுக்கு மஃஅரிபா நெறியில் நின்று விளக்கம் தருகிறது.

பெரிய நூஹ் (ஒலி) பாடிய வேத புராணத்தில் அரபி எழுத்துக்களுக்கு உரிய எண்ணீட்டு விபரங்களை நுஜ்ம் படலம் விபரித்தலும் காணலாம்.

**எண் சாண் உடல்-28 அரபு எழுத்துக்கள்:**

தொண்ணூற்றாறு தத்துவங்கள் அடங்கிய எண்சாண் உடலை 28 அரபு எழுத்துக்களில் சமைந்தவாறு பின் வரும் இஸ்லாமிய ஞானத்தமிழ் இலக்கியங்களில் கவினுற இசைத்தவாறு அறிந்து உணர்ந்து அனுபவித்தற்குரியது.

(அ) "ஆள்வார் திருநகரி மு.அ.ஷைகு முஹம்தப்துல்லா சாஹிபு பாடிய"

(ஆ) "ஹம்ஸாலெப்பை இயற்றிய மெஞ்ஞான இரத்தினலங்கார கீர்த்தனத்தில் (பதிப்பு1953) இன்ஸானுண்டான இயல்பியலும் (பதம் இரண்டு)

(இ) ஞானரத்தின சாகரமதாறிய்யா (பக்கம் 118, 119 இலும்)

(ஈ) பெரிய நூஹ் (ஒலி) பாடிய வேத புராணத்தில் மூலாதாரப் படலத்திலும் (4முதல்7 வரையுள்ள பாடல்கள்)

(உ) இலங்கை ஒலவில் ஹக்கீம் எ.எம்.யூசுப் லெப்பை இயற்றிய "மக் அது சிதுகு மனோன்மணி மாலை"யினுள் அட்சரத்தொகுப்பு படலமும்

(ஊ) கடையநல்லூர் கலீபத்து ஷெய்கு ஷாகுல் ஹமீது அப்ப நாயகம் பாடிய ஞான அற்புதப்பகுதி "ஞான ஒளிவ்" பிரிவிலும் (176-186) அரபு எழுத்துக்களால் அமைந்தவாறு எழுந்தது. மனித உரு எனச் செந்தமிழ் பாக்களால், சித்தரிக்கப்பட்டு வரையப்படுகிறது காணலாம். இலங்கை குருபாவாவின் குருமணி (1961) நூலின்கண் இதனை உரை நடையாக குறிப்பிட்டு வரைபடமும் தந்துள்ளார். ஆஷிக்கு அவதாரம் இல்லை. மெஞ்ஞான மனதலங்காரப் புகழ்ச்சியும் அரபு எழுத்துக்களால் உருவான படங்களை வெளியிட்டும் உள்ளன.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

கே.ஏ.ஜெஹபர் உசேன்

(தொடரும்)

# புலிகளின் பிரசாரங்களை தோற்கடிப்பதில் இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு தோல்வி

## அரசியல் தீர்வை வழங்குவதே அரசுக்கு வழி என்கிறார் ரொஹான்

(கொழும்பு)

**ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த தாருஸ்மான் தலைமையிலான நிபுணர் குழுவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கம் அழைத்திருக்கலாம் என பயங்கரவாத விவகார நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன கூறியுள்ளார்.**

கொழும்பு பிரித்தானிய குழுவில் மேலை நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற தலைப்பில் அவர் நேற்று முன்தினம் மாலை உரையாற்றினார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவை இலங்கை நாட்டுக்கள் அனுமதிக்காமை காரணமாக இறுதிநேரத்தில் அந்தக்குழு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசார தகவல்களை வைத்துக் கொண்டு தமது இறுதியறிக்கையை கையளித்ததாக ரொஹான் குணரத்ன கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் அரச சார்பற்ற ஆலோசனை அமைப்பு ஒன்றையும் புலம்பெயர்ந்தோர் பிரிவு ஒன்றையும் அமைக்கவேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சு தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு பிரசாரங்களை தோற்கடிப்பதில் வெற்றிகாணவில்லை.

அது இலங்கையை பொறுத்தவரை பாரிய பிழையான விடயம் என்று ரொஹான் குணரத்ன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சர்வதேசத்துடன் கொண்டிருந்த வலையமைப்பு நிதிச்சேகரிப்பு மற்றும் சிறந்த சண்டைக்குரிய ஆட்கள் என்பவை காரணமாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நெடியவன், வண.பிதா இமானுவேல் மற்றும் உருத்திரகுமாரன் ஆகியோர் தமது பிரசாரங்களை உரிய முறையில் மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் வடக்கு,கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டி நல்லிணக்கத்தை எற்படுத்த முயற்சிக்கி வேண்டும்.

அத்துடன் போருக்கு பின்னர் சமூக, பொருளாதார அபிவிருத்தி, அரசியல் தீர்வு, மனிதாபிமான உதவிகள் என்பவற்றை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டியது அவசியமானதாகும் என்று ரொஹான் குணரத்ன குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒரு இன முறுகல் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமானால் மேலும் சமூக நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பது அவசியம் என்றும் ரொஹான் குணரத்ன கூறினார். (அ-2)

# பேராதனை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை கண்டி நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பேராதனைப் பல்கலைகழகத்திலிருந்து கண்டி நகருக்கு வந்த ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் கண்டி நகரின் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்னாள் அமர்ந்து தமது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வீதிப் போக்குவரத்தும் பல மணி நேரம் தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உணவு விற்பனைக்கு பதிவு அவசியம்

கொழும்பு நகரத்தினுள் பதிவு செய்யாமல் உணவு விற்பனை செய்பவர்களுக்கு எதிராக எதிர்வரும் காலத்தில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபையில் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு நகரத்தினுள் உணவுப் பொதிகளை விற்பனை செய்யும் சுமார் 300 பேர் உள்ளனர். எனினும் இவர்களில் 155 பேர் மாத்திரமே பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே கொழும்பு நகரத்தில் பழங்கள் விற்பனை செய்பவர்களும் அடுத்த வருடம் முதல்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் கொழும்பு மாநகர சபையில் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார். (அ-2)

# அடையாள அட்டை விநியோகத்தை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

## ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர்

(கொழும்பு)

ஆட்பதிவு திணைக்களத்தின் செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் பீ.விஜேவீர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கான தனியான கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் ஆட்பதிவு திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் சகல விண்ணப்பங்களுக்கு 14 நாட்களுக்குள் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் விண்ணப்பதாரிகள் இல்லத்திற்கு தபால் மூலம் அடையாள அட்டை அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு கண்டிப்பாக சமுகமளிக்க தேவையில்லையென ஆணையாளர் நாயகம் ஜகத் பீ.விஜேவீர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஒருவர் விண்ணப்பங்களை திணைக்களத்திடம் ஒப்படைக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு 16 வயதை பூர்த்தியடையாத பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளரின் ஆலோசனையோடு வேறு அடையாள அட்டைகளை பயன்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(அ-2)

# மின்சார ரயில் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

## ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் சன நெரிசல் மிக்க நகரங்களை அண்மித்த பகுதிகளில் மின்சார ரயில் சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஒத்துழைப்புடன் இந்த போக்குவரத்து சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்ட பணிகள் மற்றும் மேல்கொத்மலை மின் உற்பத்தி செயற்றிட்டம் என்பவற்றுடன் ஒத்ததாக சன நெரிசல் மிக்க நகரங்களை அண்மித்த பகுதிகளில் மின்சார ரயில் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களமும் போக்குவரத்து சபையும் இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. முதற்கட்டமாக வெயாங்கொடையிலிருந்து களுத்துறை வரை மின்சார சேவையை நடத்த திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

மிகவும் விரைவான சொகுசு ரயில் சேவையை மக்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமென அவர் மேலும் குறிப்பிடுகின்றார். (அ-2)

# தேசியவாதம் பொருளாதார அபிவிருத்தியை கொண்டுவராது

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேசியவாதம் தோற்றுப்போனமை காரணமாகவே முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோவின் ஆட்சி கவிழ்ந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரம் தொடர்பான பேச்சாளர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

உண்மையான தேசியவாதம் கடந்த 1970 ஆம் ஆண்டில் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த தேசியவாதம் எதிர்பார்த்த எந்த ஒரு பொருளாதார அபிவிருத்தியையும் கொண்டு வரவில்லை என்று ஹர்ச டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வரசாங்கம் 25 வீத பணவீக்கத்தையே ஏற்படுத்தியது எனவும் அதேநிலையைத் தான் இன்றைய அரசாங்கமும் ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு புறத்தில் சங்ர்லா ஹோட்டல் போன்ற முதலீட்டாளர்களை வரவழைக்கும் அரசாங்கம் மறுபுறத்தில் தேசியவாதத்தை கடைப்பிடிக்கின்றது. இதன் அடிப்படையிலேயே நட்டமடையும் தனியார் நிறுவனங்களை அரசாங்கம் சட்டம் ஒன்றை இயற்றி பொறுப்பேற்றுள்ளது.

சிங்கப்பூரைப் போன்று அரச உரிமைகளைக் கொண்டு பணியாற்றப் போவதாக அரசாங்கம் கூறுகின்றது. எனினும் சிங்கப்பூரில் உள்ள அரசாங்க உரிமைகள் யாவும் சிறந்த நிபுணர்களாலேயே நடத்தப்படுகின்றன என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பிரகீத்தின் சடலத்தை கடலுக்குள் வீசினோம்

## சந்தேக நபர் வாக்குமூலம்

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட பிரகீத் எக்னெலியகொடவின் சடலத்தை தாம் உள்ளிட்ட சிலர் நீர்கொழும்பு கடலுக்கு கொண்டு சென்று வீசியதாக தெமட்டகொட சமிந்த என்பவர் குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் சிலர் முன் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட 4 பேரின் கொலை தொடர்பாக தெமட்டகொட சமிந்த கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். இவர் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சகா எனக்கூறப்படுகின்றது.

தாம் கடலில் கொண்டு வீசிய நபர் யார் என அந்த சந்தர்ப்பத்தில் அறியாது இருந்ததாகவும் அன்றிரவு ஜெஹிக் ஹில்டன் விடுதியில் நடந்த விருந்துபசாரத்தின் போது தாம் கடலில் கொண்டு வீசியது இணையத்தள செய்தியாளரான பிரகீத் எக்னெலியகொட என தமது எஜமானான துமிந்த சில்வா கூறியதாகவும் தெமட்டகொட சமிந்த கூறியுள்ளார்.

இவர்கள் சிறிது நாளில் என்னை அடுத்து கொலை செய்து விடுவார்கள். நாம் கொலை செய்தது உண்மையே. இந்தியாவில் இருந்து போதைப்பொருள் கடத்தி வருவதும் உண்மை. இவற்றை எமது தனிப்பட்ட தேவைகளுக்காக செய்யவில்லை.

தலைவர் கூறியதால் அவற்றை செய்தோம். இதனை வெளியில் சென்று கூறுங்கள். இன்று அல்லது நாளை நான் கொலை செய்யப்பட்ட பின்னர் இந்த சம்பவங்கள் மூடி மறைக்கப்படும் என தெமட்டகொட சமிந்த கூறியுள்ளார் எனவும் லங்காநியூஸ் வெப் தெரிவித்துள்ளது. (அ-2)

# மாலைதீவுக்கு இலங்கை வழங்கிய உருவச் சிலை சேதமாக்கப்பட்டது

(கொழும்பு)

சார்க் மாநாட்டை நினைவு கூறும் வகையில் அரசாங்கம் சிங்க உருவிலான விசேட சிலை ஒன்றை மாலைதீவிற்கு அன்பளிப்பு செய்திருந்தது. இந்தச் சிலை மீது தற்போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த நினைவுச் சின்னத்தை அண்மையில் மாலைதீவிற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்க் மாநாடு நடைபெற்ற மாலைதீவின் அடு தீவுகளில் அங்குரார்ப்பணம் செய்திருந்தார்.

வெளிநாட்டிலிருந்து சிலைகள் தருவிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இலங்கை அரசாங்கத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த குறித்த சிலை மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் கறுப்பு நிறத்திலான எண்ணெய் பூசப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, சிலை மீது தாக்குதல் நடத்தியவர்களை அந்நாட்டு எதிர்க்கட்சி தேசிய வீரர்களாக அறிவித்துள்ளதுடன் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி முஹமட் கயூம் எதிர்க்கட்சிக்கு தலைமை தாங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அலரிமாளிகையில் திருட்டுச் சம்பவம்; சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேகச் செயலாளரின் அலுவலகத்தைச் சேர்ந்த இரு ஊழியர்கள் அலரிமாளிகையில் இருந்த அச்சியந்திரப் பாகங்கள் மற்றும் எழுது பொருட்களைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இச்சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் திருடுவதற்காக, கோரிக்கைப்படிவங்களில் அலுவலகத்திற்குத் தேவைப்படும் பொருட்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்ததாக குற்றப்புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட பொருட்கள் கொழும்பு லோட்டஸ் வீதியிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்டதாகவும் இது பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஊழல் மோசடிகள் குறித்து ஜெனீவாவில் முறையிடுவேன்

## பேருந்து உரிமையாளர் சங்க தலைவர்

(கொழும்பு)

தனியார் போக்குவரத்து துறை மற்றும் ஏனைய துறைகளில் நிலவி வரும் ஊழல் மோசடி நிலைமைகள் குறித்து ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.


அனுமதிப்பத்திரம் வழங்குதல் உள்ளிட்ட சகல விடயங்களிலும் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் வாரத்தில் சட்டத்தரணிகள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, குற்ற விசாரணைத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தநிலைமைகள் குறித்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை எனவும் இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை என குறிப்பிட்ட அவர் பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியில் நியாயம் கோர தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்காது

## வர்த்தக அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)

சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாதென கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் எரிவாயு விலையை அதிகரிக்க லாப் கேஸ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது எனவும் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலையுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அதன் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 1421-நெதர்லாந்தில் கடல் தடுப்புச் சுவர் ஒன்று இடிந்து வெள்ளம் பரவியதில் 10 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1477-இங்கிலாந்தில் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்ட முதலாவது நூலான (Dictes Sayengis of the Philosophres) வில்லியம் கக்ஸ்டன் என்பவரால் வெளியிடப்பட்டது.

★ 1493-கொலம்பஸ் புவேர்ட்டோ ரிக்கோ என என்றழைக்கப்படும் நாட்டை முதன் முறையாகக் கண்ணுற்றார்.

★ 1626-புனித பீற்றர் பசிலிக்கா தேவாலயம் ரோம் நகரில் திறந்து வைக்கப்பட்டது.

★ 1803-கெயிட்டி புரட்சியின் கடைசிப் பெரும் போர் இடம்பெற்றது. இது கெயிட்டி குடியரசு என்ற மேற்கு அரைக்கோளத்தின் முதலாவது கறுப்பினக் குடியரசு அமைக்கப்பட வழிவகுத்தது.

★ 1863-டென்மார்க்கின் ஒன்பதாம் கிறிஸ்டியன் ஷ்லெஸ்விக் நகரம் டென்மார்க்குக்குச் சொந்தம் என அறிவிக்கும் சட்ட மூலத்துக்கு ஒப்பமிட்டான். இது 1864 இல் ஜேர்மன்- டென்மார்க் போர் ஏற்பட வழிவகுத்தது.

★ 1883-கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒரே நேர எல்லைகளை வகுத்துக் கொண்டன.

★ 1903-பனாமா கால்வாய்க்கு தனிப்பட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்பாடு பனாமாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.

★ 1909-நிக்கராகுவாவில் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட 500 புரட்சியாளர்கள் அரசுப்படையினால் கொல்லப்பட்டதை அடுத்து ஐக்கிய அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை அந்நாட்டுக்கு அனுப்பியது.

★ 1918-லாத்வியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1926-ஜோர்ஜ் பேர்னாட் ஷா தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசுப் பணத்தை ஏற்க மறுத்தார்.

★ 1929-அத்திலாந்திக் பெருங்கடலில் நியூஃபின்லாந்துக் கரையில் இடம்பெற்ற 7.2 ரிக்டர் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. 28 பேர் உயிரிழந்தனர்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் பேர்லின் நகரில் குண்டுகளை வீசியதில் 131 பேர் உயிரிழந்தனர். இச்சமரில் 9 பிரித்தானிய வான்கலங்கள் அழிக்கப்பட்டன.

★ 1943-உக்ரேனில் லூவிவ் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த 6 ஆயிரம் யூதர்கள் நாசிப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1947-நியூசிலாந்தில் கிறைஸ்ட்சேர்ச் என்ற இடத்தில் வர்த்தகத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் 41 பேர் உயிரிழந்தனர்.

★ 1978-கயானாவில் ஜிம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயிலில் இடம்பெற்ற கொலை மற்றும் தற்கொலை நிகழ்வுகளில் 270 குழந்தைகள் உட்பட 918 பேர் மரணமடைந்தனர்.

★ 1987-லண்டனில் கிங்க்ரொஸ் சுரங்கத் தொடரூந்து நிலையத்தில் இடம்பெற்ற தீயில் 31 பேர் உயிரிழந்தனர்.

★ 1989-கோபெ செயற்கைமதி விண்வெளிக்கு ஏவப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1923-அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் (இ.1998)

★ 1945-மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 6 ஆவது ஜனாதிபதி

### இறப்புக்கள்

★ 1952-போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர் (பி.1895)

★ 1962-நீல்ஸ் போர், இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1885)

### சிறப்பு நாட்கள்

★ லாத்வியா- விடுதலை (1918)

★ ஓமான்- தேசிய தினம்



★ 1936- கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நினைவு தினம் (பி.1872)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17-11-2011 முதல் 16-12-2011 வரை




(மிருகசீரிடம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3, பாதங்கள்)

**எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிக்கவர்கள் நீங்கள். அனுபவ பாடமே உங்களுக்கு அற்புதமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். அடிக்கடி மாற்றத்தை விரும்புபவர்கள் நீங்கள். வெற்றிப்பாதையை நோக்கி விரைவில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்று சொல்வீர்கள். உங்களுக்கு தன்னம்பிக்கை குறைவு. என்பதால், யாராவது ஒருவர் உங்களுக்கு யோசனைகள் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது இராசிநாதன் புதன் வக்ரம் பெற்று, மாதம் தொடங்குவது யோகம்தான். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் துரிதமாக நடைபெறும். தனாதிபதி, சந்திரன் வலுப்பெற்று மாதத்தின் தொடக்க நாள் அமைவதால், பொருளாதாரம் சிறப்பாகவே அமையும்.

குருவின் பார்வை சகாய ஸ்தானத்தில் பதிவதால், வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வாய்ப்புக்கள் வாயில் படி தேடி வந்து சேரும். ஆனால், எவ்வளவுதான் மற்றக் கிரங்கள் சாதகமாக இருந்தாலும் 4-ல் சனி இருப்பதால், அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. எனவே நல்ல வாய்ப்புக்களை கடைசி நேரத்தில் கைநழுவ விடலாம். இருந்தாலும் சனிக்குரிய பரிகாரங்களை முறையாக செய்வதோடு "கரு நிற காகம் ஏறி, காசினி தன்னைக் காக்கும்" என்ற சனிக் கவசத்தை பாராயணம் செய்து வந்தால் எந்த நாளும் இனிய நாளாக மாறும்.

ராசி நாதன் புதன் வக்ர நிவர்த்திக் குப் பிறகு தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியாளர்களில் சிலரை மாற்றம் செய்ய நினைப்பீர்கள். கலைத்துறையில் ஈடுபாடு உள்ளவர்களால் சில அனுகூலங்கள் ஏற்படும்.

விரையாபதி சுக்கிரன் நவம்பர் 23 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். எனவே அழகு சாதனப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி தாராளமாக வுந்து சேரும். பெண்வழிச் சிக்கல்கள் நல்ல முடிவுக்கு வரும்.

இராசிநாதன், புதன் நவம்பர் 30 ஆம் திகதி வக்ரம் பெறுகிறார். துலாம் இராசிக்குள் செல்வதால், பூர்வீக சொத்து விற்பனையில் இருந்த தடை அகலும். புதிய சொத்துக்கள் வாங்க, விற்க கட்டிய வீட்டில் கிரகப்பிரவேசம் வைத்துக் கொண்டாட உகந்த நேரம் இது.

குரு டிசம்பர் 15 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். அதன் பார்வை, 3,5,7 ஆகிய இடங்களில் பதிவதால், முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் தோன்றும். திருமண நிகழ்ச்சிகள் கைகூடி வருவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். புதிய கூட்டாளிகளுடன் இணைந்து தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இம்மாதம் அனுமனுக்கு "ஸ்ரீராம ஜெயம்" மாலை சூட்டி வழிபாடு செய்யுங்கள். இனிமையான வாழ்வையும் எதிர்காலத்திற்கான சேமிப்பையும் உருவாக்கிக் கொடுக்கும்.

இம்மாதம் பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும் பக்கத்து வீட்டாரின் பகை மாறும். நேசக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த நேரத்தில் நினைத்ததை நினைத்த வேளையில் முடிப்பீர்கள். நவம்பர் 30 க்கு மேல் மற்றவர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்பு உங்களிடமே திரும்பி வரலாம். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பாட்டாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகி, குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

**வளைந்து கொடுத்து காரியங்களை சாதித்துக் கொள்ளும் கடக இராசி நேயர்களே!**

எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்பவர்கள் நீங்கள். சமூக சேவையில் அதிக பற்றுக் கொண்டவர்களாக விளங்குவீர்கள் வாழ்க்கையில் வெற்றி தோல்வி என்று எதைப்பற்றியும் கவலைப் படாமல் முன்னேற்றத்திலேயே குறிக்கோளாக இருப்பீர்கள். இயற்கையை இரசிப்பவர்கள் நீங்கள். தஞ்சம் அடைந்தவர்களை காப்பாற்றுவதில் தனி ஆர்வம் காட்டுவீர்கள். உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, நன்மைகள் அதிகம் நடைபெறும் மாதமாகவே கருதலாம். மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சந்திரன், சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் முடித்துக் காட்டுவீர்கள்.

நிம்மதியாக ஆலய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது தான். தனாதிபதி சூரியன், செவ்வாய் வீட்டிலும், செவ்வாய் சூரியன் வீட்டிலுமாக பரிவர்த்தனை யோகம் பெற்றுள்ளார்கள். எனவே, சென்ற மாதத்தைக் காட்டிலும், இம்மாதம் சிறப்பானதாகவே இருக்கும். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். உடன் இருப்பவர்கள் உங்கள் குணமறிந்து செயற்படுவர்.

சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனி ஆதிக்கம் வரப்போகிறது. எனவே மணியான வாழ்வில் மாற்றங்கள் பலவும் காணப்போகிறீர்கள். பணிகளில் தொய்வு ஏற்பட்டாலும் பக்தி மார்க்கத்தில் மனதை ஈடுபடுத்திக் கொண்டால், இனி வரும் வாழ்க்கை இனிமையாக மாறும். சனியின் மூலமும் சந்தோசம் உருவாகும். "கரு நிறக் காகம் ஏறி" என்று தொடங்கும் கவசம் பாடி வழிபாடுசெய்யலாம்.




நவம்பர் 23 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை சுக்கிரன் மறை விடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழில், உத்தி யோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும் தொலை தூரப்பயணங்கள் உறுதியாகும்.

நவம்பர் 30 ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். டிசம்பர் 5 வரை தொடரும் அதன் வக்ர காலத்தில் எண்ணற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றன. பொதுவாக விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். இடம், பூமி வாங்கும் யோகம் உருவாகும். பூர்வீக சொத்துக்களினால், ஆதாயம் உண்டு. சகோதர வழியில் ஏற்படும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

தற்சமயம் குரு 10-ல் சஞ்சரிக்கிறார். பத்தில் சஞ்சரிக்கும் குருவால் பதவிமாற்றங்கள், இடமாற்றங்கள் வரும் என்பது நியதி. அந்தக் குரு வக்ரம் பெறும் போது மீண்டும் பழைய இடத்திற்கே ஒரு சிலருக்கு மாறுதல்கள் கிடைக்கும். ஆனால், இப்போது குரு, வக்ரநிவர்த்தி

சிவல்புரி சிங்காரம்

யாகி பலம் பெறுகிறர். எனவே கூடுதல் விழிப் புணர்ச்சி காட்ட வேண்டிய நேரமாகவே இதைக் கருதலாம். பொதுவாக நண்பர்களை நம்பிச் செய்யும் தொழில்களில் கூடுதல் கவனம் தேவை.

இம்மாதம் சிவ ஆலயம் சென்று தட்சணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொண்டால், கவலைகள் அனைத்தும் பறந்தோடும். இம்மாதம் வளர்சி கூடும் மாதமாகவே கருதலாம். குடும்பத்தில் இதுவரை நடைபெறாமல் இருந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

செவ்வாய் பரிவர்த்தனை யோகம் பெற்றுள்ளதால், கூடப்பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு மதிப்புக் கொடுப்பர். கணவன் மனைவி உறவில் கனிவு கூடும்.

காரிய வெற்றிக்கு விநாயகர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மாதக்கடைசியில் திடீர் பயணங்களால், மகிழ்ச்சி ஏற்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரும்.

(வளரும்)

# பாலஸ்தீனம் தனிநாடாக உதயமாவதை ஆதரித்த அரசு இஸ்ரேலைப்போல் காணியை அபகரிக்கிறது

## சொந்த நாட்டிலேயே தமிழ்மக்கள் அநாதைகளாக்கப்படுகின்றனர் என்கிறார் சிவசக்தி எம்.பி



(கொழும்பு)

**தலைமன்னார் பியர் பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதி மறுப்பது ஏன்? என சிவசக்தி ஆனந்தன் தனது அறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ளார். தலைமன்னார் பியர் பகுதியிலிருந்து 1990களில் இடம் பெயர்ந்த சுமார் அறுநூறு இஸ்லாமிய மற்றும் தமிழ்க்குடும்பங்கள் யுத்தம் முடிவுற்று இரண்டரை ஆண்டுகளின் பின்னரும் மீள்குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளனர். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.**

அவர் தொடர்ந்து தனது அறிக்கையில், 1914 ஆம் ஆண்டு பாலா என்ற தமிழருக்கு இப்பகுதியில் 121 ஏக்கர் காணி சொந்தமாக இருந்துள்ளது. பின்னர் இதனை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் விலைக்கு வாங்கி தமக்குரித்தாக்கியுள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த இவர்கள் மீண்டும் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் சென்று வீடுகட்ட முற்படுகையில் அரசால் தடுத்து நிறுத்தப்பட்டு இன்று கதியற்று நடுத்தெருவில் நிற்கின்றனர்.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழு இக்காணி பாலா என்பவருக்குரியதல்ல. அவரிடம் இருந்தது போலி ஆவணம் என்று தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சுற்றுலா அபிவிருத்தி சபை இந்நிலத்தை ஆக்கிரமித்து நட்சத்திர உல்லாச விடுதி ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த உல்லாச விடுதியை நிர்மாணிப்பதில் அரசின் உயர்மட்டத்திலுள்ளோர் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரிகின்றது.

இதனால் இப்பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்குச் சொந்தமான 17 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் இஸ்லாமிய மக்கள் நெருக்கமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்குறித்த பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் நிலைகுறித்து எதுவித தகவலும் இல்லை. இவ்வாறு நாதிகளற்றவர்களாக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு குறைந்த பட்சம் தலா ஒரு குடும்பத்திற்கு ஒன்றரை பரப்பு அதாவது பதினைந்து பேர் வீதம் மொத்தம் நாற்பது ஏக்கர் நிலப்பரப்பை வழங்கிக் குடியேற்றுமாறு மன்னார் மாவட்ட அரச நிர்வாகத்தால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

அதனைக்கூட பரிசீலிக்க மறுத்து அம்மக்களை விரட்டி உல்லாச விடுதி கட்டுவதிலேயே குறியாக இருப்பவர்களின் உண்மையான நோக்கம் என்ன? இடம்பெயர்ந்த அப்பாவி மக்களுக்கு தமது சொந்த நிலத்தில் மீள்குடியேற மறுத்து அவர்களின் நலனை உதாசீனப்படுத்தி உல்லாசத்துறைக்கு ஹொட்டேல் கட்ட முன்னுரிமை வழங்கும் அரசு எத்தகைய நல்லிணக்கத்தை இந்நாட்டில் ஏற்படுத்த விரும்புகின்றது?

பாலஸ்தீனம் தனிநாடாக உதயமாவதற்குப் பூரண ஆதரவையும் பாலஸ்தீன அரசின் தூதுவராலயத்திற்குரிய அலுவலக அந்தஸ்தை அங்கீகரித்து அதன் அலுவலகத்தைக் கொழும்பில் அனுமதித்திருக்கும் இவ்வரசு இஸ்ரேல் பாணியில் தமிழ்ப் பேசும் மக்களின் குடிமனைக் காணிகளையும் வாழ்வுரிமையையும் பறித்து அம்மக்களை நாடோடிகளாகத் திரியவிட்டிருக்கின்றது.

1990 களில் தமிழ் நிலப்பரப்பிலிருந்து இஸ்லாமிய மக்கள் வெளியேற்றப்பட்டதைக் காரணம் காட்டி இதுவரை காலமும் இஸ்லாமிய நாடுகளிடமிருந்து நிதியுதவியினைப் பெற்றுக் கொண்டு அதனைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் போராயுதங்களாகப் பயன்படுத்தி தனது அரசியலை ஸ்திரப்படுத்தி வந்த இவ்வரசு மன்னார் பியரில் அம்மக்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பில் மீளச் சென்று குடியேறிவாழ அனுமதிக்காததுடன் தாங்களாகவே தங்களது வாழ்நிலங்களில் குடியேறச் சென்றவர்களையும் தடுத்துள்ளது.

மேலும் மீள்குடியேற்றப்பட வேண்டியவர்களைத் தேடிக்கண்டுபிடித்து மீள்குடியேற்றத்தை மேற்கொள்ள வேண்டிய அத்துறை அமைச்சரான குணரட்ன வீரக்கோன் இம்மக்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதாகத் தான் அறியவில்லை என்று தெரிவித்திருப்பதானது அரசின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் எவரும் வடக்கு, கிழக்கு மக்களின் நலன்களில் கிஞ்சித்தும் அக்கறை அற்றவர்கள் என்பதையே நிரூபித்துள்ளது.

எத்தகைய கொள்கை அடிப்படையில் இவ்வரசு இத்தகைய மக்கள் விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என்ற கேள்வி எமது மக்களிடம் நிரந்தரமாக எழுந்துள்ளது. மன்னார் அரசாங்க அதிபராகத் தென்னிலங்கை பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவரை நியமித்தவுடன் ஆரம்பக் கைங்கரியமாக இந்த அநீதியான செயல் இடம் பெற்றுள்ளதாகவும் மேலும் இதுபோன்ற செயல்கள் தொடருமோ, தங்களது வாழ்வுரிமை பறிக்கப்பட்டு சொந்த நாட்டிலேயே அரசியல் அநாதைகளாக்கப்பட்டுவிடுவோமோ என்று மக்கள் கவலைகொண்டுள்ளனர்.

ஆகவே இந்த அரசு உண்மையிலேயே தனது நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்ட விரும்பினால் தலைமன்னார் பியர் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் அவர்களது சொந்த இடத்தில் காலம் தாழ்த்தாது குடியமர்த்தி அம்மக்களுக்கு மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (அ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது

## மத்தியவங்கி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பெற்றோல் விலையேற்றம், பணவீக்கம் உயர்வடைய ஏதுவாக அமையும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் சாதக நிலைமை பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தை மாற்றங்களுக்கு அமைவாக உள்நாட்டில் எரிபொருளுக்கு விலை அதிகரிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

பணவீக்கம் நிலைமைகாணப்பட்ட போதிலும் நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாலியல் தொழிலுக்காக சிறுவர்களை விற்பனை செய்யும் நிலை அதிகரிப்பு

## இலங்கையில் என்றது ஐ.நா

(கொழும்பு)

கடந்த 2010 ஆம் ஆண்டின் அறிக்கையில் இலங்கையில் சிறுவர்களைப் பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யும் சம்பவங்கள் 5 ஆயிரத்தையும் தாண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பிரதேசங்களில் பாலியல் மற்றும் ஓரினச் சேர்க்கை ஆகியவற்றுக்காக சிறுவர்களைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாக ஐ.நா. நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுற்றுலாத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் பணிகளை அரசாங்கம் ஆரம்பித்ததில் இருந்து சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாகவும் முறையற்ற சுற்றுலாத் தொழிற்துறையினாலேயே இந்த நிலைமை அதிகரித்துள்ளமைக்கு காரணம் எனவும் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# புலிகளின் கப்பல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்

## ஐ.நா.விடம் இலங்கை கடற்படை கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல்கள் குறித்து விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் இலங்கைக் கடற்படை கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம் என இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல்கள் இயங்கி வருவதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் எனவும் கடற்படையினர் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனமான சர்வதேச கடல்எல்லை அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடல் பாதுகாப்பு தொடர்பில் காலியில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டின் போது இந்த விடயம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு கடல் எல்லை அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் கப்பல் போக்குவரத்திற்கு ஆதரவளிப்பது சட்டவிரோதமானது எனவும் சில நாடுகள் இவ்வாறு ஆதரவளித்துள்ளதாக இலங்கைக் கடற்படை குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# துமிந்தவை கைது செய்வது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் தற்சமயம் அவர் வெளிநாட்டில் சிகிச்சைபெற்று வருவதால் அவரை கைது செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் ஈவா வனசுந்தரவிடம் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆலோசனை பெறத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனை பெற சட்டமா அதிபர் ஈவா வனசுந்தரவை பொலிஸ்மா அதிபர் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை துமிந்த சில்வா எம்.பியை கைதுசெய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெறுவதா அல்லது சிகிச்சையின் பின்னர் நாடு திரும்பும் போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்வதா என்பது தொடர்பாக இதுவரை எவ்விதத் தீர்மானமும் எடுக்கவில்லை எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

முல்லேரியா சம்பவத்தில் உயிரிழந்த முன்னாள் எம்.பி.பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை 15 பேர் அடங்கிய சந்தேகநபர்களின் பெயர்ப் பட்டியலில் சேர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பணிப்புரை விடுத்துள்ள கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் துமிந்த சில்வா எம்.பியை உடன் கைது செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்திருந்தது. (அ-2)

# இவ்வாண்டில் 48.62 கிலோ போதைப்பொருள் சிக்கியது

## டில்லி பொலிஸார் தகவல்

கடந்த 2010 இல் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் 15.26 கிலோ. இவ்வாண்டில் இதுவரை சிக்கியது மட்டும் 48.62 கிலோ என்று டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தலைநகரமான டில்லி இப்போது போதைப் பொருள் கடத்தல் பூமியாக மாறி வருகின்றது. ஆண்டுக்காண்டு அதிகரித்து வரும் போதைப் பொருள் நடமாட்டம் குறித்து கவலை தெரிவித்த பொலிஸார் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில்போதைப்பொருள் பறிமுதல் மூன்று மடங்கு அதிகரித்து விட்டது என்கின்றனர். ஹெரோயின், கஞ்சா, கோகைன் போன்றபோதைப்பொருட்கள்கிடைக்காத இடமே இல்லை என்ற அளவுக்கு நகரில் போதைப் பொருள் பழக்கமும் புழக்கமும் பெருகிவிட்டது.

டில்லி சந்தையில் அதிகளவில் போதைப் பொருட்கள் தாராளமாக கிடைப்பதாகவும் இங்கு வந்து சேரும் போதைப் பொருட்களில் 50 சதவீதம் கூட கைப்பற்ற முடியவில்லை.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் 50 ஆயிரம் பேர் என்பது பொலிஸ் கணக்கு. ஆனால், உண்மையில் அந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகம். வெளிநாடுகளில் இருந்து ஹெரோயின், கோகைன் போன்ற பொருட்கள் இந்தியாவிற்கு கடத்தப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

நேரடியாக இந்தியாவுக்குள் போதைப் பொருட்களை கொண்டு வர முடியாது. அது கடினம் என்பதால் நேபாளம் வழியாக கடத்துகின்றனர் என போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கோகைன் மட்டும் தென்னாபிரிக்காவில் இருந்து வருகின்றது என்பதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர். உதாரணமாக சைக்கிள் சீட் கவர்களில் அடைக்கப்பட்டு வெளிநாட்டில் இருந்து அனுப்பப்பட்ட கோகைன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (அ-2)

# பாரதச் செய்திகள்

# இந்திய தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## நீதிமன்றம் உத்தரவு

இந்திய கடல் எல்லையில் தமிழக மீனவர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனவும் கடலோர காவல் படையின் மனுவை நிராகரிப்பதாகவும் கூறி மதுரை உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டது.

மேலூர் அருகே எட்டிமங்கலத்தைச் சேர்ந்தவர் வழக்கறிஞர் ஸ்டாலின் இவர் தாக்கல் செய்த மனுவில் இந்திய கடல் பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரினார்.

மனு நீதிபதிகள் கே.என்.பாஷா, எம்.வேணுகோபால் முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. கடலோர காவல்படை துணை இயக்குநர் ஜெனரல் மூர்த்தி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் தமிழக மீனவர்கள் எல்லை மீறுவது தொடர்கிறது. தாக்குதல் நடத்தியது இலங்கை மீனவர்களாக இருக்கலாம். இது வருத்தம் அளிக்கும் விடயம். தமிழக மீனவர்கள் நம் நாட்டு கடல் எல்லையில் மீன் பிடிக்கும் போது இலங்கை மீனவர்களோ கடற்படையோ தாக்குதல் நடத்துவது வருத்தத்திற்கு உரியது.

நீதிமன்றம் உத்தரவிட்ட பின் இந்திய கடல் எல்லைக்குள் வந்த இலங்கை மீனவர்களை பிடித்து தமிழக பொலிஸாரிடம் ஒப்படைத்தோம். கடல் எல்லையை மீறி வெளியேறும் மீனவர்கள் பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு ஆளாகலாம். சர்வதேச பயங்கரவாத கும்பல் நம் மீனவர்களின் படகுகள் மூலம் இந்தியாவிற்குள் நுழைந்து மும்பை சம்பவம் போல் தாக்குதல் நடத்தலாம்.

இலங்கை பகுதியில் அத்துமீறி மீன் பிடிப்பதை மீனவர்கள் நிறுத்தவில்லை. தேவையில்லை. தேவையில்லாமல் அவர்கள் பரபரப்பை ஏற்படுத்துகின்றனர்.

மும்பை தாக்குதலைத் தொடர்ந்து ஏனைய கடற்கரை மாநிலங்களில் குறிப்பாக குஜராத்தில் இந்தியா- பாகிஸ்தான் கடல் எல்லையில் மீன் பிடிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எல்லை மீறும் மீனவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது.

இந்திய, இலங்கை சர்வதேச கடல் எல்லையில் அதேபோன்ற முறையை கொண்டு வந்து அத்துமீறி மீன் பிடித்தலை தடை செய்ய வேண்டும். இடைக்காலத் தடையை நீக்க வேண்டும் என கடலோர காவல் படை அதிகாரி மனுவில் கூறப்பட்டிருந்தது.

### நீதிபதிகள்

எல்லை தாண்டுபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட முடியாது. இந்திய கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க நீதிமன்றம் உத்தரவுப்படி போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். (அ-2)

# இந்திராவின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம்

## ஞானதேசிகன் வேண்டுகோள்

(சென்னை)



முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை காங்கிரஸ் கட்சியினர் தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை, உலக நாடுகளின் வரிசையில் இந்திய நாட்டின் புகழை உயர்த்திக் காட்டிய பெருமைக்குரியவர் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி. பாரத ரத்னா பண்டித நேரு காட்டிய வழியில், பசுமைப் புரட்சி, மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகள் தேசியமயம் போன்ற புரட்சிகரமான திட்டங்கள் மூலம் தேசமக்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளித்தவர், தமிழகத்தின் மீதும் தமிழர்கள் மீதும் மாறாத பற்றும் பாசமும் வைத்திருந்த அவர் இலங்கை வாழ் தமிழர்கள் நலனுக்காக அயராது உழைத்தவர்.

அவரின் 105 ஆம் ஆண்டு பிறந்த நாளான நாளை சனிக்கிழமை அவரது சாதனைகளையும் தியாகத்தையும் மக்களுக்கு குறிப்பாக இளைய சமுதாயத்திற்கு நினைவுறுத்த வேண்டியது காங்கிரஸ் பேரியக்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டம், வட்டாரம், நகரம் மற்றும் கிராமங்களிலுள்ள காங்கிரஸ் செயல்வீரர்கள் அனைவரும் அவரவர் பகுதிகளில் இந்திரா காந்தியின் பிறந்த நாளை அவரது உருவப் படத்தினை அலங்கரித்து வைத்து சிறப்பான விழாவாக கொண்டாட வேண்டுமென்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நக்சலைட்கள், பயங்கரவாதிகளை விட ஆபத்தானவர்கள் -பானர்ஜி

(கோல்கட்டா)

நக்சலைட்கள், பயங்கரவாதிகளை விட ஆபத்தானவர்கள் என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானார்ஜி தெரிவித்துள்ளார். திரிணமுல் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்கு முன் நக்சலைட்களுக்கு ஆதரவாக செயற்பட்டது. ஆட்சியைக் பிடித்ததும் தங்கள் கட்சி தொண்டர்களையே நக்சலைட்கள் சுட்டுக் கொன்றதால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முதல்வர் மம்தா பானார்ஜி மேற்கொண்டார்.

புருலியா உள்ளிட்ட மாவட்டங்களில் நக்சலைட்கள் பதுங்கியுள்ள இடங்களில் மாநில அரசின் கூட்டுப் படைகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் மம்தா பானார்ஜி கூறியதாவது, நக்சலைட்கள் பயங்கரவாதிகளை விட ஆபத்தாவர்களாக இருக்கிறார்கள். பேச்சு வார்த்தைக்கு வருவதில்லை. ஆனால், மக்களை மட்டும் சுட்டுக் கொல்கிறார்கள். இதையெல்லாம் நாங்கள் வாயில் விரலை வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எனவே, சட்டம்-ஒழுங்கை நாங்கள் பாதுகாப்போம். நக்சலைட்கள் எல்லோரையும் கெட்டவர்கள் என ஒட்டு மொத்தமாகக் கூறி விட முடியாது.

நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே, அவர்கள் வன்முறையைக்கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும். அவர்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தால் அவர்களின் மறுவாழ்வுக்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம்.

நக்சலைட்களுக்கு சிலர் பணமும் இருப்பிடமும் தந்து உதவுகின்றனர்.. அவர்களை அரசு கண்காணித்து வருகிறது. ஹூக்ளி மாவட்டத்தின் உத்தர்பாரா பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இந்த இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் இவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அவர் கூறினார்.

(அ-2)


# பீகார் மாநிலத்தில் மூளைக்கட்டி நோயால் இறப்புக்கள் அதிகரிப்பு

பீகார் மாநிலத்தில் பரவி வருகின்ற மூளை கட்டி நோயினால் நாளுக்கு நாள் உயிரிழப்பு அதிகரித்து வருகின்றது.

பீகார் மாநிலத்தில் உள்ள கயா என்னும் இடத்தில் கடந்த 81 நாட்களாக என்சி பாலிட்டிஸ் எனப்படும் மூளை கட்டியினால் 83 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். நாளுக்கு ஒரு உயிரிழப்பை சந்தித்த கயா பகுதி மக்கள் மூளைக்கட்டியின் அபாயத்தை எண்ணி பீதியில் இருக்கிறார்கள்.

மேலும் இதே நோயினால் 27 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அனுகிரகா நாராயன் மகத் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் 28 வயதுக்கு உட்பட்டவர்கள்.

மேலும் 384 குழந்தைகள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் 244 குழந்தைகள் குணம்பெற்று திரும்பியதாகவும் 83 குழந்தைகள் உயிரிழந்ததாகவும் இன்னும் 27 குழந்தைகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)




மத்திய தணிக்கை கட்டுப்பாட்டு ஜெனரலின் 150 ஆவது ஆண்டினையொட்டி நாணய வெளியீட்டு விழா டில்லியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பொதுக் கணக்குக்குழு தலைவர் முரளி மனோகர் ஜோஷி, தணிக்கைக் கட்டுப்பாட்டு அலுவலர் வினோத்ராய் ஆகியோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# ரஷ்ய பிரதமருக்கு விருது

## சீனா அறிவிப்பு



ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடினுக்கு இந்த ஆண்டுக்கான சீன சமாதான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான முயற்சிகளில் ஈடுபடுவோரை கௌரவிக்கும் வகையில் சீனாவில் கன்பூசியஸ் சமாதான விருது கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டுக்கான விருதுக்கு ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், சீனா விவசாய ஆராய்ச்சியாளர் யுவான் லாங்பிங் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

விருதுக்கு பெயரை தேர்வு செய்ய கல்வியாளர்கள் பல்வேறு துறை நிபுணர்கள் கொண்ட தேர்வுக் குழுவினர் வாக்களித்தனர். அதிக பட்ச வாக்குகள் பெற்று ரஷ்ய பிரதமர் புடின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

லிபியாவில் நேட்டோ படைகள் குண்டு வீச புடின் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். சமாதான விருதுக்கு அவரது பெயர் தேர்வு செய்யப்பட இதுவே முக்கிய காரணம் என்று தேர்வு குழு கூறியுள்ளது. இந்த விருது சீன நோபல் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.(அ-2)

# கொடூர,சாலை விபத்தில் 18 குழந்தைகள் மரணம்

## சீனாவில் சம்பவம்



சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் நிகழ்ந்த கொடூர, வீதி விபத்தில் 18 குழந்தைகள் உட்பட 19 பேர் பலியாயினர்.

சீனாவில் குறைந்த இருக்கைகள் கொண்ட பாடசாலை வாகனங்களில் அதிக எண்ணிக்கையில் மழலைப் பள்ளிக் குழந்தைகளை, மாணவர்களை ஏற்றிச் செல்வது வாடிக்கை. இதனால் அங்கு பாடசாலை வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன.

இந்நிலையில் சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள கன்சு மாகாணத்தில் கிங்யாங் நகரில் உள்ள மழலைப் பள்ளி ஒன்றுக்கு பாடசாலை வாகனம் 64 பேருடன் சென்று கொண்டிருந்தது. இவர்களில் 62 பேர் குழந்தைகள்.

யூலின்சி பகுதியில் எதிரில் வந்து கொண்டிருந்த நிலக்கரி லொறியுடன் பள்ளி வாகனம் நேருக்கு நேராக மோதியது.

இதில் வாகனம் நொறுங்கி விட்டது. சம்பவ இடத்திலேயே நான்கு குழந்தைகளும் வாகனம் ஓட்டுநரும் பலியாகினர்.

மீதி 14 பேர் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியிலும் வைத்தியசாலையிலும் பலியாயினர் 45 குழந்தைகள் காயம் அடைந்தும் 13 பேர் படுகாயமும் அடைந்துள்ளனர்.

டுவிட்டர் மற்றும் பேஸ்புக் சமூக வலைத் தளங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இச் சம்பவத்திற்கு அதிர்ச்சி வருத்தம் தெரிவித்தனர்.

(அ-2)

# பாலஸ்தீனத்தில் இடைக்கால அரசு; தீவிரவாத அமைப்புக்கள் உடன்பாடு

பாலஸ்தீனத்தில்இடைக்கால அரசு அமைக்க தீவிரவாத அமைப்புக்களான பதா ஹமாஸ் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் இரு தீவிரவாத அமைப்புக்களிடையே கடந்த 4ஆண்டுகளாக இருந்து வந்த பகை முடிவுக்கு வரும்நிலை ஏற்பட்டுள்ளது. எகிப்து நாட்டின் மத்தியஸ்துடன் இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது.பிரதமர் சலாம் ப்ாயத்தை இடைக்கால அரசிலிருந்து விலக்கி வைக்க பாலஸ்தீன அரசின் ஜனாதிபதியும் பதா இயக்கத்தின் தலைவருமான மஹ்மூத் அப்பாஸ் ஒப்புக்கொண்டதையடுத்து இந்த உடன்பாடு ஏற்பட்டது.

எதிர்வரும் 25 ஆம் திகதி எகிப்து ரோவில் பதா தலைவர் அப்பாஸும் ஹமாஸ் தலைவர்களும் சந்தித்துப்பேச உள்ளனர். இதனைத் தொடர்ந்து இடைக்கால அரசு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் சில பிரச்சினைகளில் இரு அமைப்புக்கும் இடையே ஆழமான இடைவெளி உள்ளதால் பேச்சுவார்த்தை சவாலானதாக அமையும் என்று தெரிகிறது. பாலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் பதாவும் காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்பும் வலுவுடன் உள்ளன.

இது குறித்து பி.எல்.ஓ வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தப் பேச்சுவார்த்தை மூலம் இரு தரப்புக்கும் ஏற்படும் இணக்கம் பொதுத் தேர்தலுக்கு வழி வகுக்கும். மேலும் பிளவுபட்ட பாலஸ்தீனம் ஐ.நா.வில் முழு உறுப்பினர் அந்தஸ்து எவ்வாறு பெற முடியும் என்ற சந்தேகத்திற்கு விடையும் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




# அமெ.விமானத்தாக்குதலில் 16 தீவிரவாதிகள் உயிரிழப்பு

## பாகிஸ்தானில் சம்பவம்

பாகிஸ்தானில் அமெரிக்க விமானம் நடத்திய தாக்குதலில் தலிபான் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த 16 பேர் பலியானதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் தங்கியிருப்பதாக அமெரிக்க இராணுவ பிரிவுக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அவர்களை அழிப்பதற்காக அமெரிக்கா தனக்கு சொந்தமான ஆறு விமானங்கள் மூலம் அப்பகுதியில் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் தலிபான் அமைப்பை சேர்ந்த 16 பேர் பலியானதாகவும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் எனவும் அப்பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பதவியேற்ற பின்னர் இப்பகுதியில் தாக்குதல் நடத்துவது அதிகரித்துள்ளது என்றும் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் சுமார் 60 இற்கும் மேற்பட்ட தாக்குதல் நடந்துள்ளது என்றும் இப்பகுதிகளில் 25 இற்கும் மேற்பட்ட தீவிரவாத குழுக்கள் மறைந்து இருப்பதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)



அவுஸ்திரேலியா கான்பெரா நகரில் நிருபர்களுக்கு கடந்த புதன்கிழமை கூட்டாக பேட்டியளிக்கும் அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா, அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# கடாபியின் மகனை ஒப்படைக்குமாறு லிபிய அரசாங்கம் கோரிக்கை

(டிரிபோலி)

லிபிய முன்னாள் ஜனாதிபதியாக இருந்த கடாபியின் மகன் சாதி, நைஜர் நாட்டில் அடைக்கலம் புகுந்து இருக்கின்றார். அவரை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று லிபிய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. இதற்கு நைஜர் நாடு மறுத்து விட்டது

கடாபி சொந்த ஊரான சிர்ட்டேயில் பதுங்கி இருந்த போது புரட்சிப் படைகளிடம் பிடிபட்டு அடித்து உதைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது மகன்களில் 3 பேர் போரில் பலியாகி விட்டனர். 4 பேர் மட்டுமே உயிருடன் இருக்கின்றார்கள்.

உயிருடன் இருப்பவர்களில் ஒருவர் அல் சாதி. அவர் அயல் நாடான நைஜர் நாட்டில் தஞ்சம் புகுந்து இருக்கின்றார். கடந்த ஓகஸ்ட் மாதம் டிரிபோலி நகருக்குள் புரட்சிப் படை நுழைந்ததும் அவர் அங்கிருந்து தப்பி ஓடி நைஜர் நாட்டுக்குள் புகுந்தார்.

அவரை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று லிபியாவின் தற்காலிக அரசாங்கம் நைஜர் நாட்டிட கேட்டுக் கொண்டது.

அதோடு சர்வதேச பொலிஸாரிடமும் புகார் செய்தது. அவரை தங்கள் உறுப்பு நாடான நைஜர் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று சர்வதேச பொலிஸ் நைஜர் நாட்டுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

லிபியா மற்றும் சர்வதேச பொலிசின் கோரிக்கைகளை ஏற்க நைஜர் மறுத்து விட்டது.

அல் சாதி பயணம் செய்வதற்கு ஐ.நா. சபை தடை விதித்து உள்ளது. அதோடு அவரது சொத்துக்களை எல்லாம் முடக்கி உள்ளது.

அல் சாதி பயணம் செய்வதற்கு தடை இருப்பதை சுட்டிக்காட்டிய நைஜர், இந்த தடை காரணமாக அவர் பயணம் செய்ய முடியாது. அது இரத்தாகும் வரை நைஜர் நாட்டில் தான் தங்கி இருப்பார் என்று அறிவித்து உள்ளது.

இதனால் லிபியாவின் தற்காலிக அரசுக்கும் நைஜர் நாட்டுக்கும் இடையேயான உறவு பாதிக்கப்பட்டு உள்ளது.

மூத்த மகன் முகமதுவும் ஹனிபல் முகமதுவும் தங்கள் தாயார் மற்றும் தங்கை ஆயிஷாடன் அல்ஜீரியாவில் அடைக்கலம் புகுந்து உள்ளனர். (அ-2)

# இந்தியாவுக்கு யுரேனிய விநியோகம்; அமெ. ஆதரவு

(மெல்போர்ன்)

இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்யும் அவுஸ்திரேலிய நாட்டின் முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்ய முடியாது என்று முதலில் மறுத்து வந்தது அவுஸ்திரேலியா. இந்த நிலையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்குவோம் என்று அவுஸ்திரேலியா கடந்த செவ்வாய்க் கிழமை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மெல்போர்னில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது, அவுஸ்திரேலியாவின் இந்த அறிவிப்பு அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தின் (என்பிடி) விதிமுறைகளுக்கு ஏற்றதாக உள்ளது. அணுசக்தித்துறையில் இந்தியா மிகப்பெரிய நாடாக உள்ளது. அணுசக்தித்துறையில் இந்திய-அவுஸ்திரேலிய நாடுகளின் நல்லுறவு அவசியம் என்றார். (அ-2)

# நோர்வேயின் அறிக்கைக்கு இந்தியா பதில் சொல்லியே ஆக வேண்டும்

## விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்டன அறிக்கை

(கொழும்பு)

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநிலச் செயற்குழு மற்றும் உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற விடுதலைச் சிறுத்தைகளுக்கு பாராட்டு விழா சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை ஆட்சியாளர்களுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை மேற்கொண்ட நோர்வே அரசு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஈழச் சிக்கலில் அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கு இந்திய அரசு ஆர்வம் காட்டவில்லை என்பதையும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதிலேயே முனைப்பாக செயற்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் இனத்திற்கு தமிழீழத்திற்கும் எதிராக தொடர்ந்து செயற்பட்டுவரும் இந்திய அரசின் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாக கண்டிக்கிறது.

அத்துடன் இந்திய அரசின் தமிழின விரோதப் போக்கை உறுதிப்படுத்தியுள்ள நோர்வே அரசின் அறிக்கை தொடர்பாக, இந்திய அரசு அனைத்துலக சமூகத்திற்கு உரிய விளக்கம் அளித்திட வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகளின் இம்மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது.

இலங்கை பெரும்பான்மையினரால் தமிழக மீனவர்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து தாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் நீடித்து வருகிறது. அண்மையில் இந்திய தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் அவர்களும் இலங்கை அரசின் ஜனாதிபதி ராஜபக்ஷவும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னரும் இலங்கை படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கை கடற்படையினர் தொடர்ச்சியான காட்டுமிராண்டித்தனத்தை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எத்தகைய முனைப்பும் காட்டாத இந்திய மற்றும் தமிழக அரசுகளின் போக்குகளை விடுதலைச் சிறுத்தைகள் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் இது தொடர்பாக இந்தியத் தலைமை அமைச்சரவைச் சந்தித்து முறையிடுவதற்கு தமிழக அரசு அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் விடுதலைச் சிறுத்தைகள் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைபட்டுள்ள நிலையில் அவர்கள் மீதான கொலைத் தண்டனையை விலக்குவதற்கு தமிழக அரசு அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகளின் மாநிலச் செயற்குழு தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கிறது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

இவ் ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை தேவி பாகவதம் தொடர் சொற்பொழிவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆற்றவுள்ளார். (அ-35)


Fortuna has been a leading overseas recruitment company for over 25 years. We started out with a vision that a recruitment agency should be honest, ethical and do more than just find you a job.
-OUR VISION STATEMENT-




| பிரிவு | தொகை | சம்பளம் |
|---|---|---|
| 1. (வாகனத்தில் ஓயில் மாற்றுபவர்) Lube Operator | 100 | AED 1,250.00 |
| 2. (வாகனம் பழுதுபார்பவா) Auto Mechanic | 100 | AED 1,250.00 |
| 3. (வாடிக்கையாளர் சேவை உதவியாளா)Customer Service Assistant | 100 | AED 1,200.00 |
| 4. Waiter / Waitress | 100 | AED 1,200.00 |
| 5. (பெட்ரோல் நிரப்புபவர்) Petrol Filler | 100 | AED 1,000.00 |
| அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான பணம் மாத்திரமே அறவிடப்படும | | AED - 30/- |

**தகைமைகள்**
- வயது : 21-35 க்கு மத்தியில்
- அனுபவம் : 1,2ம் பிரிவுகளுக்கு 2 வருட அனுபவம்
- மொழி ஆற்றல் : ஆங்கிலம் பேசும் தகைமை

**சலுகைகள்**
- போக்குவரத்து வசதி : கம்பனியால் வழங்கப்படும்
- மருத்துவ வசதி : கம்பனியால் வழங்கப்படும்
- விமான டிக்கட் : கம்பனியால் வழங்கப்படும்
- ஓவர் டைம் : அந்நாட்டு விதிமுறைகளுக்கு அமைய

**விதிமுறைகள்**
- ஒப்பந்த காலம் : 2 வருடம்
- வேலை செய்யும் இடம் : U.A.E
- வேலை நேரம் : நாளுக்கு 8 மணிநேரம்
- வேறு விதிமுறைகள் அந்நாட்டின் தொழிலாளர் சட்டத்துக்கு அமைய

இதற்கான நேர்முகப் பரீட்சை 2011 நவம்பர் மாதம் 22ம் திகதி முதல் 25ம் திகதி வரை காலை 9.00 மணிதொடக்கம் 3.00 மணிவரை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும்

மேலதிக விபரத்துக்குத் தொடர்புகொள்ளவும்
24 மணிநேர சேவை
0317 500 700

Apply Online
www.topjobs.lk/fortuna

Fortuna Enterprises (Pvt) Ltd.
No. 96, Porutota Road, Ettukala, Negombo.
(opp. Browns Beach Hotel)
Tel : +94 317 500 700 Fax : +94 317 500 720
Web: www.fortunalanka.com
careers@fortunalanka.com
Labour License no. 079


## வெள்ளைக் கொடி வழக்கின் தீர்ப்பு இன்றைய தினம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினமான இன்றையதினம் வெள்ளிக்கிழமை முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகா மீதான வெள்ளைக் கொடி விவகார வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர தலைமையிலான குழு இன்று வெள்ளைக் கொடி விவகார வழக்குத் தீர்ப்பை அறிவிக்கவுள்ளது.

இதனை முன்னிட்டு கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இறுதிக் கட்ட யுத்தத்தில் அரசு படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களை சுட்டுக்கொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என சரத் பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இதன் பின்னணியில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக வெள்ளைக் கொடி விவகார வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து அரச கட்சி, எதிர்க்கட்சி, பாதுகாப்பு பிரிவினர், ஊடகங்கள் உள்ளிட்ட பல தரப்பினரிடம் நீதிமன்றில் சாட்சியங்கள் பெறப்பட்டன.

இந்நிலையில் விசாரணைகள் யாவும் நிறைவடைந்து இன்றைய தினம் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. (அ-2)

## பாலஸ்தீன பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு

ஐந்து நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ள பாலஸ்தீன பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் அலரி மாளிகையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாலஸ்தீன பீடுநிஸா நகர சபையின் தலைவர் அறபாத் எம்.ஏ.கலாப் தலைமையிலான தூதுக்குழுவினரே விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலேயே இந்த சந்திப்பு அலரிமாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இலங்கை-பாலஸ்தீன நட்புறவு சபையின் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 29 வருடங்களாக மேற்கொண்ட சேவையையும் அந்த தூதுக்குழுவினர் பாராட்டினர்.

பாலஸ்தீனம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றியமை தங்களுடைய நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அந்த குழுவினர், இலங்கையில் தங்கியிருக்கின்ற காலத்தில் மரபுரிமை இடங்களை பார்வையிடுவதற்கு தமது குழு விருப்பம் கொள்வதாக தெரிவித்த கலாப், இலங்கை அண்மைய காலத்திற்குள் பெற்றுக்கொண்ட பெறுபேறு தொடர்பில் தங்களுடைய நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான அதாவுத செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் பேராசிரியர் அன்வர் அல் அஸா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பாலஸ்தீன பீடுநிஸா நகரசபையின் தலைவர் அரபாத், எம். ஏ. கலாப் தலைமையிலான குழுவினர் கொழும்பு மாநகர சபையின் முதல்வர் ஏ.எச்.எம்.முஸம்மிலை முதல்வர் காரியாலயத்தில் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர். (அ-2)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**



**திரு கதிரவேலு ஆறுமுகம்**

(ஓய்வு நிலை அதிபர்)

எங்கள் கல்லூரியின் ஆசிரியர்கள்
திருமதி நேசமலர் மரியதாசன்
திருமதி நேசராணி தனபாலசிங்கம்
ஆகியோரின் அன்பு நிறை தந்தை
திரு. கதிரவேலு ஆறுமுகம் அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறுவதுடன்
இன்றைய ஆத்ம சாந்திப்
பிரார்த்தனைகளில் எம்மையும் இணைத்துக்
கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்.
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(6807)

எவ்வித தியாகமும் இன்றி எந்தவித நன்மையையும் பெறமுடியாது. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பண்ணை வீதியின் ஆபத்தான நிலைபோக்க தீவக மக்கள் அணிதிரள வேண்டும்

பண்ணைப் பாலத்தின் திருத்த வேலை குறித்து இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தும் எதுவும் நடந்த பாடில்லை.

மாறாக மாரி காலம் ஆரம்பித்துவிட்ட நிலையில், பண்ணை வீதியின் அவலம் பெரும் மோசமாகிவிட்டது.

பயணிக்கவே முடியாது என்ற நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்கும் தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குமான பயண சேவை நடைபெறுகின்றது.

மாரி காலம் ஆரம்பித்துவிட்டால் பண்ணை வீதியூடான போக்குவரத்து மிகவும் ஆபத்தானதாகிவிடும் எச்சரிக்கையை இவ்விடத்தில் ஏற்கெனவே - பல தடவைகள் தெரிவித்திருந்தும் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது.

பக்குவமாக எடுத்துக் கூறியும் உரியவர்கள் பண்ணை வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்காத நிலைமையானது வீதி திருத்தும் பணியில் ஊழல் கடுமையாக வேலை செய்கின்றது என்பதை உணரவைக்கின்றது.

இதன் காரணமாகவே அதிகாரிகள் வாய் மூடி மௌனமாக இருக்கிறார்கள் என அனுமானிப்பதிலும் தவறில்லை.

எதுவாயினும் அதிகாரிகளின் மௌனத்திற்காக, பண்ணை வீதி தரக்கூடிய உயிராபத்துக்களை அனுமதிப்பது அபத்தமானது.

எனவே இது விடயத்தில் தீவக மக்கள் மற்றும் தீவகப் பொது அமைப்புகள் ஒன்று திரண்டு இரண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதில் ஒன்று, பண்ணை வீதியை புனரமைக்கும் ஒப்பந்த நிறுவனம் தனது பணியை தீவிரப்படுத்த அல்லது ஒப்பந்தத்தை முடிபுறுத்த வேண்டும்.

இரண்டாவது, பண்ணை வீதித் திருத்தத்தை செம்மையாக மேற்பார்வை செய்யாமல் -புனரமைப்புப் பணியை துரிதப்படுத்தாமல் இருந்த உரிய அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அவர்களை நீதிமன்றில் நிறுத்தவேண்டும்.

இந்த இரண்டு பணிகளையும் தீவக மக்கள் செய்யத் தவறும் பட்சத்தில்,

பண்ணை வீதியில் தண்ணீர் தேங்கி நிற்கும் குன்றுகுழிகளில் விழுந்து எழுந்து பயணம் தொடர்வதையும்,

சில வேளைகளில் குன்றுகுழிகளில் விழுந்தவர்களின் விழுக்காடு இறுதியானதாகவும் அமைந்து விடுவது தவிர்க்க முடியாமல் போகும்.

காரைநகர் வீதியை விரைவில் புனரமைக்க முடியுமென்றால், பருத்தித்துறை-வல்லை வீதியை வேகமாக அமைக்க முடியுமென்றால், ஏ-9 வீதியில் ஏகப்பட்ட பணியாளர்கள் நின்று நாளும் பொழுதும் வீதியை விஸ்தரிக்க முடியு மென்றால், பண்ணை வீதிப் புனரமைப்பை மட்டும் ஏன் வேகப்படுத்த முடியாது?

தீவக மக்கள் ஓரணியில் திரளாவிட்டால் அடுத்த ஆண்டல்ல அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இதேகதிதான்.

ஆகையால் தீவக மக்கள் திரண்டு சட்டத்திற்கு உட்பட்டவாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இது நடந்தால் பண்ணை வீதியில் இறங்கி நடக்க வேண்டி வராது.

# யுத்தத்தில் சிறுவர் ஈடுபடுத்தப்பட்டதால் சர்வதேசத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியுள்ளது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டதினால் சர்வதேச சட்டங்களை அவதானிக்கும் சர்வதேசத்திற்கு நாங்கள் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் நேற்று யாழ். குருநகரில் திறந்து வைக்கப்பட்ட போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் இன்றைய தினம் எமது அமைச்சு புதியதொரு அத்தியாயத்தை இந்த நாட்டில் ஆரம்பித்து வைக்கிறது.

நாட்டில் 2ஆவது தடவையாக சிறுவர் நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் அமைவது வரலாற்று சிறப்புமிக்க தொரு விடயம்.

எங்களுக்கு இந்த நீதிமன்றத்தை அமைப்பதற்காக யுனிசெப் நிறுவனம் தந்த ஆதரவுக்கும் அதன் வதிவிடப் பிரதிநிதிக்கும் ஏனைய உதவியாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை சிறுவர்களுக்கான சட்டம் நீதிசம்பந்தமான விடயங்களிலேயே மற்ற நாடுகளை விடவும் முன்னிலையில் நிற்கிறது என்பது பெருமைக்குரியது.

இருந்தாலும் நாம் எடுக்கும் நடவடிக்கைகளை நடைமுறைக்கு சாத்தியமாக்க போதியளவு பௌதிக வளங்களைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இன்னும் அடையவேண்டிய இலக்கு நிறையவுள்ளது.


இந்த நாட்டில் இன்னும் முக்கிய நகரங்களை மையப்படுத்தி சிறுவர் நீதிமன்றங்களை அமைப்பதற்கு எமது அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

அண்மைக்காலமாக எமது நாடு சிறுவர் குறித்த விடயங்களில் அதிலும் குறிப்பாக யுத்தகாலங்களிலே சிறுவர் குறித்தவிடயங்களில் தேவையற்ற அவதானத்திற்குள்ளான நாடாக இலங்கை காணப்படுகின்றது.

சிறுவர்களை வலுக்கட்டாயமாக போரில் ஈடுபடுத்துகின்ற நாடுகளில் ஒன்றாக எமது நாட்டை சர்வதேச சமூகம் கருத்தில் எடுத்திருந்தது.

அந்தக்குற்றச்சாட்டு அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டாக இல்லாது போனாலும் அரசாங்கத்துடன் மோதிய ஒரு பயங்கரவாதக் குழு மீதான அவதானமாக இருந்தாலும் அது முழு நாட்டையும் குறித்ததொரு அவதானமாகவே இருந்தது.

சர்வதேச சமூகம் ஒரு தேவையற்ற விடயத்திற்கு தனது அவதானத்தை செலுத்தியதால் அது தொடர்பாக நாம் கூர்ந்து ஆராய வேண்டியிருந்தது என்றார். (ச-6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மணப்பெண் குத்துவிளக்கு ஏற்றுவதன் தத்துவம்

மக்கள் வழக்கத்தில் பயன்படுத்தி வரும் ஒவ்வொரு சம்பிரதாய நடவடிக்கைக்கும் ஒரு காரணம் உண்டு.மணப்பெண்கள் குத்துவிளக்கு ஏற்றுகிறார்களே ஏன் தெரியுமா?

ஐந்து முகங்களைக் கொண்டது குத்துவிளக்கு. அன்பு, மன உறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்கள் குத்துவிளக்கில் உள்ள ஐந்து முகங்களிலும் பிராசிக்கும் ஒளியைப் போன்று குடும்பப் பெண்களிடம் ஒளிவிட வேண்டும் என்பதே இதன் தத்துவம். அதனால் தான் திருமணமாகி மறு வீட்டுக்கு வந்தவுடன் குத்துவிளக்கு ஏற்றுகிறாள் மணமகள்.

## சான்றிதழுக்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ) பெறுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளை நாளை சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிக்கு முள்ளியவளை முன்கற்கை மதிப்பீட்டு நிலையத்திற்கு பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் சமுகம் அளிக்குமாறு தேசிய முகாமையாளர் ஆர்.ரி.ரத்னகுமார் அறிவித்துள்ளார்.

இந்நிலையத்தில் மோட்டார் சைக்கிள் பொறியியல், டீசல் இயந்திர பொறியியல், படகு வழி இணைப்பு இயந்திர பொறியியல், முச்சக்கர வண்டி பொறியியல், தன்னியக்க வாகன தகர வேலையாள், உருக்கி இணைப்பாளர் எனும் துறைகளுக்குரிய பரீட்சைகளும் நடத்தப்படுகின்றன.

எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் பரீட்சைக்கான விண்ணப்பங்களும் நிலையத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவித்துள்ளார். (அ)







## வெள்ளி நற்சிந்தனை

44

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற நம்பிக்கை தொண்டர் உள்ளத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும்.ஆனால் அத்தகைய தொண்டர்கள் கூட்டத்தில் இணைந்து கொள்வதற்கும் ஒருதகுதிப்பாடு தேவை. அடியார்கள்,தொண்டர் என இருவகையினர் தேவாரங்களிலே குறிப்பிடுகின்றனர். தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் எனச் சுந்தரர் கூறுகிறார்.சிறுத்தொண்டர் என்னும் அடியார் வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்திலே பாடியுள்ளார். மணிவாசகர் இறைவனிடம் நாடகத்தால் உன்னடியார் போல நடந்து வாழ்வதாகக்கூறுகிறார்.எனினும்தொண்டனாகிய அடியார் வரிசையிலே சேரலாம் என அப்பூதியடிகள் வரலாறு கூறுகிறது.

பெரியபுராணத்தில் மணிவாசகர் வரலாறு இடம்பெறவில்லை. திருச்சதகம் பாடிய மணிவாசகர் இறைவன் தன்னை அடி யார் நடுவுள்அழைத்துக் கூட்டித்தொண்டனாக ஏற்றுக்கொள்வதற்கு ஏன் பின்னிகிற்கிறான் என ஆய்வு செய்கிறார். இறைவன் உறையுமிடங்களைத் தெளி வாகக்காட்டுகிறார்.தேனும் வண்டும் என்றும் நீங்காத கொன்றை மாலையையுடைய இறைவன் தோற்றத்தை நினைத்து மனதால் வேண்டுதல் செய்கிறார். இங்கே சிவன் சூடும் மலர் மாலையின் அழகும் பண்பும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.தேன், கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.தேன் உண்பவர்களுக்கு களிப்பூட்டும் தன்மையுடையது.

இறைவன் நடுவிலுள்ள பூவுலகத்திலும் அப்பூவுலகிற்க்கீழுள்ள உலகங்களிலும் மேலே உள்ள உலகங்களிலும் எல்லாப்பொருளிலும் நிறைந்துள்ளான். இத்தன்மையை மணிவாசகர் மேலும் தெளிவாக ஒரு உவமைமூலம் விளக்கியுள்ளார்.எள்ளும் அதனுள் கலந்துள்ள எண்ணெய்யும் போல எங்கும் நிறைந்திருக்கிறான் எனக் கூறியுள்ளார். எந்தையே என விளித்து இறைவன் பெருமையை எல்லோருக்கும் அறிய எடுத்துரைக்கின்றார்.என்னை அன்பரில் கூய் பணி கொள்ளும் கில் என்ற அடி என்னை அன்பர் கூட்டத்திலே கூவியழைத்துக் கொள்வானோ என ஐயப்படுகிறார்.உலக வாழ்க்கையைப் பற்றியே எண்ணிச் செயற்பட்டதால் தன்னை இறைவன் தன்னுடைய அடியார் கூட்டத்திலே சேர்க்கமாட்டான் என்ற நினைப்புடனேயே இப்பாடலைப் பாடியுள்ளார்.

எனினும் எந்தையே!என அழைத்துக் கேட்பதால் இறைவன் தன்னுடைய குழந்தையாக ஏற்றுக் கொள்வான் என்றதொரு உணர்வும் அவருக்கிருந்துள்ளது.ஆற்றல் இல்லாத தன்னையும் ஒருதந்தை தன் மகனை ஏற்பதுபோல இறைவனும் ஏற்றுக்கொள்வான்.தன்னிடம் சேர விரும்பிய அடியவர்களை இறைவன் ஆட்கொண்டருளுவான்.குருவடிவமாக வந்து வலிய ஆட்கொண்டமை மணிவாசகர் மனதில் நிலைத்திருப்பதால் மீண்டும் அவ்வடிவிலே வராமல் பிள்ளையின் பிழை பொறுக்கும் தந்தையாக வருவான் எனக் கூறுகிறார்.நெருங்கிய அன்பு நிலையிலே இறைவனை நாமும் வழிபடலாம். உறவுமுறையிலே இறையன்பு நிலையைப் பல அடியார்கள் பாடியுள்ளனர். இறைவனே வந்து கூவியழைத்துச் செல்வான். ஐம்புலன்களை ஒடுக்கி இறை நினைப்போடு வாழவே மணிவாசகர் விரும்புகிறார். அதுவும் இறையருளாலே நடைபெறவேண்டிப் பாடுகிறார்.

*கொள்ளுங்கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி*
*கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன் றையான்*
*நள்ளுங் கிழளு மேலுளும் யாவுளும்*
*எள்ளும் எண்ணெயும் போல நின்ற எந்தையே!*

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க சாட்சியமளித்தவர்களை விசாரிக்கின்றோம்

## ஆணைக்குழு பேச்சாளர்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியம் அளித்த சிலர் தமது பிரச்சினைகளை தீர்த்துத்தருமாறு கோரிக்கை விடுத்ததன் காரணமாக அவ்வாறானவர்களின் விண்ணப்பங்களை நாங்கள் சட்டமா அதிபரிடம் ஒப்படைத்தோம்.

அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் ரீதியிலேயே சட்ட மா அதிபர் திணைக்களத்தின் வழி காட்டலின் கீழ் முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னாள் ஊடக பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாறாக பாதிக்கப்பட்டவர்கள் ஏன் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர் என்பது தொடர்பில் விசாரணை நடத்த எந்தத் தரப்பும் முயற்சிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் சாட்சியமளித்த பெண் ஒருவர் விசாரிக்கப்படவுள்ளதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில்,

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவானது கொழும்பிலும் வெளிமாவட்டங்களிலும் விசாரணை அமர்வுகளை மக்களிடம் சாட்சியங்களை பெற்றுக் கொண்டது.

வெளி மாவட்டங்களில் இடம்பெற்ற அமர்வுகளின்போது சாட்சியங்களை வழங்கிய போது சிபார்சுகளை முன்வைத்தனர். சிலர் தமக்கு நேர்ந்த பாதிப்புக்கள் அவலங்கள் தொடர்பில் சாட்சியமளித்தனர்.

முக்கியமாக தமது உறவினர்கள் கடத்தப்பட்டமை தொடர்பிலும் பலர் முறைப்பாடுகளை செய்தனர். அதாவது தமக்கு நீதியை நிலைநாட்டுமாறு மக்கள் மன்றாட்டமாக கோரினர். அவர்களில் சிலரிடம் இருந்து அதிக தகவல்கள் கிடைத்தமையினால் அவ்வாறு சாட்சியங்களை வழங்கியவர்களுக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்க ஆணைக்குழு தீர்மானித்தது.

அதன்படி சுமார் 15 விண்ணப்பங்களை நல்லிணக்க ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்ததுடன் இவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் மூலம் கோரியிருந்தோம்.

எமது கடிதத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததுடன் இந்த சம்பவங்கள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் விசாரணை நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தது. விசாரணைகள் தொடர்பான இலக்கங்களும் அனுப்பப்பட்டிருந்தன.

நாங்கள் உடனடியாக அது தொடர்பில் குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவித்தோம். அதாவது அவர்களின் முறைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் விசாரணை நடத்தப்படும் என்று சாட்சியமளித்திருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவித்திருந்தோம்.

இதனைவிடுத்து குறிப்பிட்ட மக்கள் ஏன் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தனர் என்பது குறித்து விசாரணை நடத்த எவரும் முயற்சிக்கவில்லை. இதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். தமக்கு நீதி வழங்குமாறு சிலர் கோரிக்கை விடுத்தமையின் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் நவம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்து விட்டதுடன் ஆணைக்குழுவின் ஊடக பேச்சாளர் என்ற எனது பொறுப்பு 15 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வந்து விட்டது என்றார். (அ-2)

## மாணவி காயம்

மட்டக்களப்பு தாழங்குடா இசை நடனக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரி வில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி மாணவி மஞ்சள் கடவையை கடக்க முற்பட்ட போது எதிரே வந்த முச்சக்கர வண்டியொன்று மோதியதனாலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. (அ)

## நடமாடும் சேவை ஒத்திவைப்பு

காலங்கடந்த, பிறப்பு, இறப்பு மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான நடமாடும் சேவை நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஈ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார்.

ஆயினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. (அ-2)

# வர்த்தக நிறுவனங்களை பாதுகாக்க கோரினேன்

## நாடு திரும்பிய ரணில் கருத்து

சர்வதேச ஜனநாயகவாதிகளின் சம்மேளன மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் துணைவியார் மைத்திரி விக்ரமசிங்க நேற்று காலை 7.45 மணிக்கு விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

லண்டனில் இடம்பெற்ற சர்வதேச ஜனநாயவாதிகளின் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் வலையத் தலைவராக இம் மாநாட்டில் ரணில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கம் பறிமுதல் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அரசியல் பழிவா[ங்]கல்களை மேற்கொண்டுள்ளது.

அத்தோடு சட்ட மூலத்தை பயன்படுத்தி வர்த்தக நிறுவனங்கள் அரசாங்கத்தால் பறி முதல் செய்யப்படுவதால் வர்த்தகர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே, வர்த்தக நிறுவனங்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வே[ண்]டுமென சம்மேளனத்தின் பிரதிநிதிகள், உலக வங்கி பிரதிநிதிகள் உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்து கேட்டுக்கொண்டதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர்களை வரவேற்க மாகாண சபைத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# கோதுமை மாவை 10 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்

## தே.சு.முன்னணி வேண்டுகோள்

ஒரு கிலோ கோதுமையின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உள்நாட்டு விவசாயிகளுக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்க முடியும் என்று தேசிய சுதந்திர முன்னணி குறிப்பிட்டுள்ளதுடன் அரசு மேற்படி பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணாவிடின் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அக்கட்சி எச்சரித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய அவர்,

விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் ஐ.தே.கட்சியோ, ஜே.வி.பியோ பேசுவதில்லை. எனவே, விவசாயிகளின் நலன்களை கருத்திற்கொண்டும் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார கொள்கைக்கு பாடம் புகட்டவும் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் என கூறினார். (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

நுளம்பு பெருக்கத்திற்கேற்ற வகையில் வீட்டு வளவினுள் கழிவுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

புகையிலையால் செய்யப்பட்ட சிகரெட்டை 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 11 வர்த்தகர்கள் சாவகச்சேரி மது வரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 11 வர்த்தகர்களுக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3-29)

---

(கிளிநொச்சி)

18.3 போத்தல் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 9 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

750 போத்தல் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 8 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதுடன் முற்குற்றமுள்ளதால் 2 மாத கட்டாய சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

4 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதுடன் 10 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க ஈரான் உதவும்

## இலங்கைக்கான ஈரானிய தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 2 பில்லியன் பெறுமதியான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் திட்டத்திற்கு ஈரானிய அரசாங்கம் உதவுமென இலங்கைக்கான ஈரானிய தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி நபி முஹம்மது ஹசன் பூரை தெரிவித்துள்ளார்.


கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தில் இலங்கைக்கான புதிய ஈரான் தூதுவரை அறிமுகம் செய்யும் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுற்றுலா, விவசாயம், கலாசாரம், பொது உறவு போன்ற பல துறைகளில் இலங்கையுடனான [உறவு]பினை ஈரானிய அரசாங்கம் அதிகரிக்கும் என[வும்] இலங்கையில் நிலையான அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்துவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இஸ்லாம் மற்றும் ஏனைய மதங்களுக்கிடையிலான சிறந்த புரிந்துணர்வைக் கட்டியெழுப்பவும் ஈரானிய அரசு உதவும் என குறிப்பிட்ட அவர் இலங்கையிலுள்ள அனைத்து சமூகத்தினருக்கும் ஈரானிய தேசிய மொழியான பாரசீகத்தை கற்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத்திட்டம் ,ஆயிரம் கிராமங்களுக்கான மின்சார வசதி என பல பாரிய உதவிகளை ஈரானிய அரசாங்கம் இலங்கையில் முன்னர் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், ஈரான் ஆன்மீகத் தலைவரின் செயலக தெற்காசிய பிராந்திய பிரதிநிதியான அயதுல்லா செய்ந் சஹ்ருகி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-2)







யுனிசெவ் நிதியுதவியுடன் குருநகரில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் நீதிமன்றம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப் படுவதையும், நீதி மன்ற கட்டிடத் தொகுதியை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க நாடா வெட்டி திறந்து வைப்பதையும், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நினை வுக்கல்லை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# இந்திய அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி



(கொல்கத்தா)

இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

பிராவோ சதமடித்து போராடியும் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 463 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 14ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 631 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 478 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை பொலோன் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுபெடுத்தாடுமாறு இந்திய அணி பணித்தது.

இதனடிப்படையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுபெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் 3 நாள் ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து 195 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிராவோ-சந்தர்ப்போல் ஜோடி சிறப்பாண இணைப்பை வழங்கினர்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 108 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்த போது சிவ் நாராயணன் சந்தர்போல் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பிராவோவுடன் இணைந்த சாமுவேல்ஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் டரன் பிராவோ 181 பந்துகளில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் இணைப்பை பிரிக்க இந்திய அணித்தலைவர் தோனி பல வியூகங்களை கையாண்டும் பலளிக்காமல் போக மார்லன் சாமுவேல்ஸ் 57 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.

இந்தஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 132 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த போது டரன் பிராவோ 230 பந்துகளில் (16 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 136 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பாயொ மூன்று ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து அணித்தலைவர் சமி களமிறங்க மறுமுனையில் மார்லன் சாமுவேல்ஸ் 111 பந்துகளில் (13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 84 ஓட்டங்களை எடுத்த ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ரோச்சும் ஒரு ஓட்டத்துடன் வெளியேற மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்தடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

இறுதியில் அணித்தலைவர் சமி அதிரடி காட்டி அணியை இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து மீட்கப் போராடினார்.

எனினும் அணித்தலைவர் சமி 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதி விக்கெட்டுக்காக களமிறங்கிய பிசோ எதிர்கொண்ட முதல் பந்திலேயே பூச்சியத்துடன் வெளியேறினார்.

இதன் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 463 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக யாதவ் 4 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, பிரஜன் ஓஜா, ரவிச்சந்திரன் அஷ்வின் தலா 2 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

இப்போட்டியில் இந்திய அணி சார்பாக ஆட்டமிழக்காமல் 176 ஓட்டங்களை எடுத்த வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இத்தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 22ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகிறது.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி செல்வேந்திரம் மலர்விழி
தம்பதியினரின் செல்லப் புதல்வி
செ. திவ்வியா
யா/ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கல்வி
பயிலும் இவர் 2011 ம் ஆண்டு நடைபெற்ற
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்துள்ளார்.
அவரை மேலும் பல பட்டங்கள் பெற்று
உயர் நிலை அடைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பெரியப்பா: இளங்கோவன்,
பெரியம்மா: புஸ்பரத்தினம், அக்காமார்,
அண்ணன்மார் மற்றும் லண்டனில் வசிக்கும்
பெரியப்பா ஆகிய ஈழநேசன் குடும்பத்தினர்.

(C-4990)

பொதுக்கூட்டம்

காரைநகர் களபூமி இந்து இளைஞர் மன்ற பொதுக் கூட்டம் எதிர்வரும் 20.11.2011 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் த.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறும் என்பதை சகலருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

த.தியாகலிங்கம்
தலைவர்

(6820)


## கருத்தடை சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பகுதிகளில் வளர்க்கப்படும் பெண் நாய்களிற்கான கருத்தடை சிகிச்சை இன்று வெள்ளிக்கிழமை குருநகர் பகுதியிலுள்ள தொடர்மாடி, றெக்கிளமேசன், பாரதி, கிறீன் பீல்ட் சனசமூக நிலையங்களிலும், நாளை 19ம் திகதி சனிக்கிழமை நாவாந்துறை பகுதியிலுள்ள ஆறுகால்மடம், கண்ணாபுரம், சென் நீக்கிலஸ் சனசமூக நிலையங்களிலும் நடைபெறவுள்ளது என யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர், ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (எ-11)


வளர்மதி சனசமூக நிலையம்

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

வளர்மதி சனசமூக நிலைய தலைவர் பொ. தம்பிமுத்து தலைமையில் 2012 ற்கான நிர்வாகம் கடந்த 08/10/2011 பி.ப 7.30 மணியளவில் தெரிவு செய்யப்பட்டது.

இதில் அமோக ஆதரவுடன் முன்னர் 1990ம் ஆண்டுகாலப் பகுதியில் இருந்த தலைவர் க. வல்லிபுரம் தெரிவு செய்யப்பட்டார்.

தலைவராக - க.வல்லிபுரம்
செயலாளராக - பொ. காந்தராசா
பொருளாளராக - வே.மதன்
உப தலைவராக - சி. நடேசன்
உப செயலாளராக - க. பரமேஸ்வரன்

இவர்களுடன் நிர்வாக குழு உறுப்பினர்கள்,

01. ஐ.தர்மசிறிராசா
02. மா. செல்வராசா
03. வ. வேலாயுதம்
04. சி.மனோகரன்
05. க. ஜெயக்குமார்
06. செ. குகனேஸ்வரன்
07. ஆ. தம்பித்துரை
08. வே. ஜெயாகரன்
09. வா. கந்தப்பு

இத்துடன் சனசமூக நிலைய போஷகராக முன்னாள் தலைவர் பொ.தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத் தகவலினை சன சமூக நிர்வாகத்தினர் அறியத் தருகின்றனர்.

நன்றி

(C-4992)

**TILKO JAFFNA CITY HOTEL**

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# வெள்ளைக்கொடி...

அவர்கள் செயற்படவேண்டும் எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வெள்ளக் கொடி வழக்குத் தொடர்பான தீர்ப்பை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சண்டே லீடர் என்ற வார இறுதி செய்தித்தாளுக்கு அளித்த செவ்வி தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

பாதுகாப்புச் செயலாளருக்கும் தேசத்திற்கும் அவதூறு ஏற்படும் வகையில்முன்னாள் இராணுவத் தளபதி, செய்தித்தாளுக்கு செவ்வி அளித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கொழும்பு ஹல்ஸ்ட்டொப் பிரதேசத்தில் அமைந்துள்ள உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் இன்றையதினம் தீர்ப்பு அறிவிக்கப் படவுள்ளது. (எ-5)

# இணையத்...

பதற்கோ அல்லது அவை தொடர்பில் விளக்கம் கேட்பதற்கோ மேற்படி இணையத்தளங்களை நடத்துபவர்களை தொடர்பு கொள்ள முடியாதுள்ளது. அவற்றை நடத்துபவர்கள் யார்? எங்கிருந்து அவ் இணையத்தளங்களை நடத்துகிறார்கள்? என்பது பற்றி எவருக்கும் தெரியாது. (எ-1)

# கடற்புலிகளை வழிமறி...

களால் கடத்தப்பட்ட அந்த இந்திய இழுவைப் படகில் இருந்த இந்தியர் ஒருவரை கடலில் குதிக்க அனுமதித் தனர். அவரை கடலோரக் காவல்படை கப்பலான ஹூராவி மீட்டது என்றும் லெப். கேணல் மொகமட் இப்ராகிம் கூறியுள்ளார்.

முன்னதாக சிறிகிருஸ்ணா கடும் மோதல் ஒன்றையடுத்தே மூழ்கடிக்கப்பட்டதாக தகவல் வெளியானது. தற்போது மாலைதீவு பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ள தகவல் அதற்கு முற்றிலும் முரண்பாடானதாக உள்ளது.

இயந்திரக் கோளாறு ஏற்பட்ட தால் சிறிகிருஸ்ணா கடற்புலிகளால் கொண்டு செல்லவோ கைவிட்டுச் செல்லவோ முடியவில்லை.

ஹூராவியின் பணியாளர்கள் வேறு பணிகளில் ஈடுபட்டிருந்ததால் அந்த இடத்துக்கு சென்றடைய ஒன்றரை மணிநேரம் வரை தாமதம் ஏற்பட்டது.அதற்குள் சிறிகிருஸ் ணா தப்பிச் சென்றிருக்க முயன்றிருக்கலாம்.

அவர்களை சரணடைய வைப்ப தற்கு பல மணிநேரம் பேச்சுக்களை நடத்தினோம். இதன்போது பல இந்திய அதிகாரிகளும் மாலுமிகளும் ஹூராவியில் இருந்தனர்.

2007 மே மாதம் இந்தச் சம்ப வம் இடம் பெறுவதற்கு சொற்ப காலம் முன்னதாகவே ஹூராவியை இந்தியா வழங்கியிருந்தது.

எனவே மாலைதீவு கடலோரக் காவல் படையினருக்கு அதனைக் கையாளும் பயிற்சியை வழங்க இந்திய அதிகாரிகளும் மாலுமி களும் அதில் தங்கியிருந்தனர்.

மாலைதீவு கடற்படையினரின் கைளில் அந்த ஆயுதங்கள் விழுவதைத் தடுப்பதற்காகவே கடற்புலிகள் சிறிகிருஸ்ணாவுக்கு தீ வைத்து அழித்தனர்.

ஆனால் அதில் இருந்து தப்பிய வரை விசாரிக்க இலங்கை கடற்படைக்கு மாலைதீவு அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

அது ஆழ் கடலில் இயங்கிக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் ஏனைய கப்பல்களை இலங்கை கடற்படை குறிவைப்பதற்கு வசதியானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-6)

# தமிழ் பேசு...

தமிழ்மொழியில் வழக்குகள் நடத்தப்படுவதை ஊக்குவிக்க அங்கு பணியாற்றும் நீதிபதிகளுக்கு இந்திய நீதிபதிகளுடன் இணைந்து பயிற்சிகளை வழங்குவதற்கு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம்.

யாழ் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தை ஊக்குவிப்பதற்காக நீதித்துறை, சட்ட விரிவுரைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், சட்ட ஆய்வு நிறுவகமொன்றை விரைவில் தோற்றுவிக்கவுள் ளோம். இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நீதிமன்றங்களுக்கு உள்ளதைப் போன்று தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழி மூல நீதிமன்றங்களை வலுவூட்ட ஏற்பாடுகளை செய்துவருகிறோம் என்றார்.(எ-5)


**திசைகாட்டி**



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 021 491 4527
E-mail: Thisaikaddi@sltnet.lk
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk
[யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை]

TKY 07

7 வயதுக்குட்பட்ட மழலைகளுக்கான ஆங்கிலக் கற்கைநெறி
(புறஜெக்டர் மூலம் நடாத்தப்படும் குழந்தைகளுக்கான விசேட ஆங்கிலக் கற்கைநெறி)
எமது நிறுவனத்தின் வசதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டமையால் 5ஆவது பிரிவையும் நாளை 19.11.2011 பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளோம்.
ஒரு பிரிவில் 25 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
தொலைபேசி மூலம் பதிவுகள் இடம்பெறமாட்டாது.

காரியதரிசி
திசைகாட்டி

(சி-4994)


# தோல்வியைக் கண்டு...

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

சர்வதேசபோட்டிகளைநடத்தியதன் மூலமாகவே பலநாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளாக மாறின. மூன்று தசாப்த கால யுத்தத்திலிருந்து விடுபட்டுள்ள இலங்கை தற்பொழுது அபிவிருத்திப் பாதையில் பயணித்துக் கொண்டிருகின்றது. இந்நிலையில் பொதுநலவாயப் போட்டிகளை நடத்துவதன் மூலம் எமது நாடும் அபிவிருத்தியின் உச்சத்தை எட்டும் என்று எதிர்பார்த்தோம். எமது முயற்சி பயனளிக்கவில்லை.

அதற்காக நாம் தோல்வியடையவில்லை. இவ்வாறானதொரு முயற்சியில் களமிறங்கியதே பெரிய விடயம். இதற்காக இலங்கை பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் போட்டி மற்றும் ஐபா சர்வதேச விருது விழா போன்றவற்றை இலங்கையில் நடத்தியதற்காக இலங்கை நட்டத்தை எதிர்நோக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களில்எவ்வித உண்மையும் இல்லை.

நாம் ஒரு விடயத்திற்காக செய்யும் செலவுகளுக்கான பிரதி பலனை பணமாக எதிர்பார்த்தால் மாத்திரமே அது நட்டமாக கருதப்படும். மாறாக உலக அளவில் கிடைக் கும் பிரசாரம், உலகப்பார் வை, வரவேற்பு உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற் கொள்ளும் பட்சத்தில் அது நட்டமாக கருதப் பட மாட்டாது.

சர்வதேச கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தவரையில் அந்த உலகப் பார்வை எமது நாட்டுக்கு கிடைத்தது. அதுதவிர இப்போட்டியினை நடத்தியதற்காக ஐ.சி.சியிடமிருந்து எமக்கு இன்னும் பணம் கிடைக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, ஐபா விருது விழாவினை நடத்தியதற்காக சர்வதேச பிரசாரமும் வரவேற்பும் இலங்கைக்கு நிறையவே கிடைத்துள்ளன. இதனால் இலங்கை பாரியளவில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. இவற்றைக் கொண்டு குறித்த நிகழ்ச்சிகளை நடத்தியதால் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறுவதில் அர்த்தம் இல்லை என்றார்.(எ-5)




உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட
நல்லூர் திருமணப் பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்
சரவணா புடைவையகம்
NALLUR
SARAVANA TEX

770,772, K.K.S Road,
Thaddatheru Junction, Jaffna.
T.P.: 021 222 0421 Fax: 021 222 0421

526, 529, Pointpedro Road,
Nallur, Jaffna.
T.P.: 021 222 1723 Fax: 021 222 1723

Email: nallur.saravana@gmail.com

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.

770,772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.




# நிரந்தர...

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர மட்டக்களப்பிலும், நீர்கொழும்பிலும் சிறுவர் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

சிறுவர்களின் நடத்தைகளில் பெற்றோர்கள் அவதானம் செலுத் த வேண்டும். அப்போது தான் குற்றச் செயல்களில் சிறுவர்கள் ஈடுபடுவதைத் தடுக்க முடியும்.

நாட்டில் சிறுவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவது அதிகரித்து வருகின்றது.

இருப்பினும் அவற்றைக் கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என்றார். (எ-6)


**MA, M.Com, M.Sc, MBA, PG DIPLOMA**

**மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (வெளிவாரி)**

மேற்படி பல்கலைக்கழகத்தினால் வைகாசி மாதம் (MAY) பரீட்சை எடுப்பதற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

MA ல் — வரலாறு, பொருளியல், அரச அறிவியல் விஞ்ஞானம், பொது நிர்வாகம், சமூகவியல், தமிழ், ஆங்கிலம், சமயமும் தத்துவமும், Journalism and Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

M.Com ல் — வர்த்தகம், வங்கியியல், கூட்டுறவு ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

PG Diploma — ஒரு வருட கற்கை நெறியாக, Journalism Mass Communication, Management, Marketing Management, Hospital Management, Computer Application ஆகியவற்றினுள் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தின் ஊடாக நடைபெறுகின்றன.
- பதிவு முடிவுத்திகதி 25.11.2011 ஆகும்.
- பரீட்சைகள் யாவும் புதிய கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
- இப்பட்ட நெறிகளானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

குறிப்பு :- H.N.D.A, H.N.D.M பட்டம் பெற்ற மாணவர்கள் M.Com க்கான பதிவினை மேற்கொள்ள முடியும்.

யாழ்.இணைப்பாளர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
T.P NO : 021 222 8148

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-4979)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.